விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 18 புதன்கிழமை (02.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073

MADRAS CEMENTS LTD
ரா
ம்
கோ
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# நடுவானில் விபத்து! 2 கிபிர் விமானங்கள் வெடித்துச் சிதறின


(கம்பஹா)

இலங்கை விமானப்படையின் 60-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று விமான சாகச பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு கிபிர் ரக விமானங்கள் ஒன்றுடன் ஒன்று நடுவானில் மோதி விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் ஒரு விமானி பலியானார். மற்றைய விமானி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கம்பஹா மாவட்டத்திலுள்ள யக்கலைப் பகுதியிலேயே நேற்றுக் காலை 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)



# போர்க்குற்ற விசாரணைகளை இலங்கை எதிர்கொள்ள நேரிடும்

## அமெரிக்கா எச்சரிக்கை



(ஜெனீவா)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காக இலங்கை அரசாங்கம் சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தப்படக் கூடும் என அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான உதவி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 16-வது அமர்வு நேற்று முன்தினம் ஜெனீவாவில் ஆரம்பமாகியுள்ள நிலையில் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க, சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளத் தவறினால் சர்வதேச விசாரணைகளை எதிர்கொள்ள நேரிடும்.

இவ் விவகாரம் குறித்து அரசாங்கம் சர்வதேச மரபுகளுக்கு ஏற்ற வகையில் விசாரணைகளை மேற்கொள்ளத் தவறினால், இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச ஆணைக் குழு ஒன்றை நியமிப்பதற்கான அழுத்தங்கள் அதிகரிக்கும். (20ஆம் பக்கம் பார்க்க)

# இறுதி யுத்தத்தின் போது தாக்குதலை நடத்திய விமானியே பலியானார்

(கொழும்பு)

இறுதிக்கட்ட போரின் போது விடுதலைப் புலிகளுக்கெதிரான முக்கிய தாக்குதல்களை மேற்கொண்ட விமானியே நேற்று காலை இடம்பெற்ற விமான விபத்தில் கொல்லப்பட்டுள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்ட விமானியின் மரண விசாரணைகளை நேற்று அத்தனகல மேலதிக மாஜிஸ்ரேட் ருவன் பத்திரண முன்னிலையில் விபத்து நடைபெற்ற இடத்தில் நடைபெற்ற போதே விமானப்படையினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

நான்காம் கட்ட ஈழப் போரில் முக்கிய பல தாக்குதல்களை மேற்கொண்டவர்களில் விபத்தில் கொல்லப்பட்ட மொனாஷ் பெரேரா முக்கிய பங்காற்றியவர். அதன் காரணமாகவே விமானப்படையின் அறுபதாம் ஆண்டு நிறைவுக் கண்காட்சியில் அவருக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தது.

இவ் விபத்தின் போது அவரது இருக்கை தன்னியக்க முறையில் விமானத்திலிருந்து வெளியே தூக்கியெறியப்பட்டிருந்த போதிலும் விமானத்தின் சிறகொன்றில் சிக்கிக் கொண்டதால் விரியாமற் போனதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

# பொருட்களின் விலை உயர்வை கண்டித்து ஜே.வி.பி. நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நேற்று நடைபெற்றது. மாலை 4 மணியளவில் கெம்பல் மைதானத்திற்கு முன்பாக ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட பேரணி கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தை சென்றடைந்தது.

மலையகத் தொழிலாளர்களுடைய சம்பளத்தை அதிகரி, பொருட்களின் விலையை உடனடியாகக் குறைப்பதாக பொய் சொல்ல வேண்டாம், வரிகளை இரத்துச்செய், அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறை போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறும் கோஷங்கள் எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா,

பொருட்களின் விலை உயர்வடைந்து செல்கிறது. வேலை வாய்ப்புக்கள் இல்லை. மக்கள் மூன்று வேளைகளிலும் மரக்கறிகளுடன் சாப்பிட முடியாது திண்டாடுகின்றனர். கிழங்கும் சோறும் மாத்திரமே மக்கள் சாப்பிடுகின்றனர். அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். இவ்வாறானதொரு அரசாங்கம் நாட்டுக்கு தேவையில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வீட்டுக்கு செல்லும் காலம் நெருங்கிவிட்டது என்றார். (ச-5)

# விமானப் படைக்கு புதிய பேச்சாளர்

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் புதிய பேச்சாளராக குறூப் கப்டன் அன்ரூ விஜேசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். அதேவேளை இதுவரை காலம் விமானப்படை பேச்சாளராக கடமையாற்றிய குறூப் கப்டன் ஜனக நாணயக்கார படைத்தரப்பின் பிரதம அதிகாரியான எயார் சீப் மார்ஷல் ரொஷான் குணதிலகவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பட்டலந்தையிலுள்ள படைத்துறைச் சேவைகள், கட்டளைகள் மற்றும் அதிகாரிகள் கல்லூரியின் ஆலோசகராக செயற்பட்ட குறூப் கப்டன் அன்ரூ விஜேசூரிய, 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை விமானப்படையின் குரல்தரவல்ல அதிகாரியாக முன்னரும் கடமையாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## Study & Work in UK and Canada

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777

London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03 (C-2291)

## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:-0729994777 (C-2290

## விற்பனைக்கு

கட்டுமண், பூச்சு மண் 1கியூப் 11,000/= , 6X9 கருங்கல் 1 கியூப் 9,000/=, ஒரு தரமான அரிகல் 40/=, 3/4" கருங்கல் சல்லி 13,000/=, அதிகம் தேவைப்படு வோருக்கு விலைக்கழிவுண்டு. யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் கொடுக்கப்படும்.

தொடர்புக்கு: 0776253719 (3898)

## தையல் தெரிந்தவர் தேவை

பலாலி வீதி,உரும்பிராயில் இயங்கிவரும் தையல் கடைக்கு தையல் தெரிந்த ஆண்கள் தேவை.

உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு:
0773368709
0773575052 (3919)

## UK,Newzealand இல் கல்வி

O/Level ஆங்கிலத்தில் 'C' இருப்பின் UK,Newzealand நாடுகளுக்கான Student Visa இற்கு இலவசமாகவிண்ணப்பிக்கலாம்.

Thames International
644, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்,
0212224593, 0750422108,
0115737306. (3915)

## Quick Learning Course

## Spoken English with Grammar

Duration
1 Month
Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

07-03-2011
Batch 12 : 09.00 AM - 01.00 PM
Batch 13 : 01.30 PM - 05.30 PM

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளச்சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

# மரண அறிவித்தல்

## நாகமணி - இரட்ணவடிவு



யாழ்ப்பாணம் நல்லூர் முடமாவடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி-இரட்ணவடிவு அவர்கள் 26.02.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகமணி (இ.போ.ச முன்னாள் சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இத்தினி,சீதேவி (அருமை) தம்பதியினரின் மகளும், தம்பிராசா (ரெயிலர்), காலஞ்சென்ற சண்முகவடிவு (முடமாவடி) ஆகியோரின் சகோதரியும், சிவஞானம் (கொழும்பு), செல்வஞானம் (கனடா), நவஞானம் (இந்திரன்-ஜேர்மனி), ரவீந்திரன் (வாசு-பிரான்ஸ்),இராஜேஸ்வரன் (ஜேர்மனி),ஜெகதீஸ்வரன் (வெள்ளை-கொழும்பு), சுகிர்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவமணி (இராசாத்தி-கொழும்பு), ரோகினி (கனடா),ஞானலதா (ஜேர்மனி), மைதிலி (டெய்சி-பிரான்ஸ்), சுபேந்தினி (ஜேர்மனி),பாலினி (காமினி-கொழும்பு), சுபீஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறிதர், வனஜா, ரஜீபன் (கனடா), ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும், சஞ்சீவன், தாரணி (கொழும்பு), அனோஜன், சோபிகா, நிரோசிக்கா (கனடா), றொசான்,செறான்,செறோலினா (பிரான்ஸ்), சஞ்ஜெயன்,சபீனா, சஜீன் (ஜேர்மனி), சரஞ்ஜீவ், நஸ்மிகா, நிசானிக்கா(கொழும்பு), ஜஸ்மிதன், ஜசின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அக்சயன்(கொழும்பு) அவர்களின் பூட்டியும், இராசமணி, காலஞ்சென்ற நாகமுத்து ஆறுமுகம் அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.03.2011 வியாழக்கிழமை (நாளை) அவரது இல்லத்தில் நண்பகல் 12மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

449,இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர்.
தகவல் குடும்பத்தினர்.
T.P:021 2222539, 077 5147869 (3918)

# STUDY IN UK

## SPOT ADMISSION

## யாழ். மாணவர்களுக்கு ஓர் அரிய இறுதிச் சந்தர்ப்பம்

எதிர்வரும் 4,5,6ஆம் திகதிகளில் UKஇல் இருந்து வருகை தரும் கல்லூரி அதிபர்களுடன் கலந்துரையாடும் ஓர் அரிய சந்தர்ப்பம்.




- IELTS தேவையில்லை O/L தகைமையுடன் செல்லலாம்.
- உடனடி கல்லூரி அனுமதி.
- கல்லூரிக் கட்டணம் £2000 மட்டுமே.
- ஒரு வாரத்தினுள் VFS இல் ஆவணங்கள் கையளிக்கப்படும்.
- 100% விசா உத்தரவாதம்.
- 100% பகுதிநேர வேலைவாய்ப்புக்கான உத்தரவாதம்.
- நீங்கள் வழங்கும் சகல பணத்திற்கும் அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படும்.
- நாம் குறிப்பிடும் காலத்தினுள் நீங்கள் UK செல்லாவிட்டால் உங்கள் சகல பணத்தினையும் மீளப் பெறலாம்.

மொத்தச் செலவு 7லட்சம் மட்டுமே.

எந்தவொரு INTERVIEW உம் இல்லை. ஆரம்பக் கட்டணம் 25,000/= மட்டுமே.
முன் பதிவு செய்யும் மாணவர்களுக்கே அதிபர்களுடன் கலந்துரையாடும் அனுமதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு
உங்கள் நம்பிக்கைத் தோழன்
Sana: 0776277767



கந்தர்மடச் சந்தி,
பலாலி வீதி,
கந்தர்மடம். (3916)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## அயர்லாந்து அணியுடன் இன்று மோதல்
## இங்கிலாந்துக்கு 2-வது வெற்றி கிடைக்குமா?



(பெங்களூர்)

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பெங்களூரில் இன்று நடைபெறும் 15ஆவது லீக் போட்டியில் இங்கிலாந்து-அயர்லாந்து அணிகள் மோதுகின்றன.

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகின்றது.

இதில் பெங்களூரில் இன்று நடைபெறும் 15 ஆவது லீக் போட்டியில் 'பி' பிரிவைச் சேர்ந்த இங்கிலாந்து- அயர்லாந்து அணிகள் மோதுகின்றன.

அயர்லாந்து பலவீனமான அணி என்பதால் இங்கிலாந்து இப்போட்டியில் எளிதாக வெற்றிபெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 25ஆம் திகதி பங்களாதேஷில் நடந்த போட்டியில் அயர்லாந்து தோல்வி அடைந்தது. ஆனாலும் 205 ஓட்டங்களிலேயே பங்களாதேஷ் அணியின் அனைத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தியது.

அதேபோல் இங்கிலாந்து அணிக்கும் அயர்லாந்து நெருக்கடியை கொடுக்க முடியும். இங்கிலாந்து, நெதர்லாந்துடன் மோதிய போட்டியில் சிறப்பான வெற்றியைப் பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்திய அணியுடன் மோதிய போட்டி சமனிலையில் முடிபடைந்தது. இன்று நடக்கும் போட்டியில் அயர்லாந்து அணியை வீழ்த்தி இங்கிலாந்து 2 ஆவது வெற்றியை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இங்கிலாந்து அணிக்கு அபராதம்

பெங்களூரில் நடைபெற்ற இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான லீக் போட்டி சமனிலை யில் முடிபடைந்தது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசவில்லை. அந்த அணி ஒரு ஓவர் வீசும் நேரத்தை அதிகமாக எடுத்துகொண்டது.

இதனைத் தொடர்ந்து போட்டி நடுவர் மகாநாம ஐ.சி.சி. நடத்தை விதியின்படி இங்கிலாந்து அணிக்கு அபராதம் விதித்துள்ளார். விதிமுறைபடி ஒரு ஓவர் தாமதத்துக்கு அணி வீரர்களுக்கு போட்டி கட்டணத்தில் 10 சதவீதமும் அணித் தலைவருக்கு 20 சதவீதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## ஐ.ரி.என். நிறுவனத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை!

### மஹேல ஜெயவர்த்தனா ஆலோசனை



ஐ.ரி.என் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து இலங்கை கிரிக்கெட் அணியின் உப தலைவர் மஹேல ஜெயவர்த்தனா ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் பாகிஸ்தான் அணியுடனான போட்டியின் போது அவர் ஆட்ட நிர்ணய சதியில் ஈடுபட்டார் என்றகருத்துப்பட ஐ.ரி.என் தொலைக்காட்சியில் விமர்சனம் செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில், இவ் விமர்சனம் குறித்து தனது சட்டத்தரணியுடன் ஆலோசனை நடத்திய இவர், ஐ.ரி. என் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கை கிரிக்கெட் அணியின் மற்றுமொரு வீரரான திலான் சமரவீர மீதும் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வெற்றிபெறும் என வர்த்தகர் ஒருவர் 18 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பந்தயம் கட்டியிருந்ததாகவும், இதனால் பலர் சேர்ந்து இந்த ஆட்டத்தின் போக்கை மாற்றியதாகவும் இப் போட்டிக்கு மறுநாள் விமர்சனம் ஒன்று ஐ.ரி.என் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டிருந்தது.

இவ் விமர்சனத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் உப தலைவர் மஹேல ஜெயவர்த்தனவும், மற்றுமொரு வீரரான திலான் சமரவீரவும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான ஆட்டத்தின் போக்கை மாற்றியிருக்கலாம் என தாம் கருதுவதாக விமர்சகர் குறிப்பிட்டிருந்தார்.

இந் நிலையிலேயே, இவ் விமர்சனம் தொடர்பில் ஐ.ரி.என் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து மஹேல ஜெயவர்த்தனா ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் மஹேல ஜெயவர்த்தனா இரு ஓட்டங்களுடனும், திலான் சமரவீர ஒரு ஓட்டத்துடன் ஆட்டம் இழந்திருந்ததுடன், இலங்கை கிரிக்கெட் அணி 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### இன்றைய கேள்வி ?

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மோதலில் வெற்றி யாருக்கு?

..................................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 05.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு நவகலா வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

பெயர்:- ..................................

முகவரி:- ..................................

..................................

தொ.பே:- ..................................

தே.அ.அ.இல:- ..................................

அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

### காலிறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள் ?

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 10.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு **ஒலிம்பியா ஸ்போட்ஸ்** வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

1. ..................................
2. ..................................
3. ..................................
4. ..................................
5. ..................................
6. ..................................
7. ..................................
8. ..................................

அனுப்ப வேண்டிய முகவரி

'உலகக் கிண்ணம்'
வலம்புரி
இல.3,2 -ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................

முகவரி: ..................................

..................................

தொ.பே: ..................................

தே.அ.அ.இல: ..................................

ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல06, ஜும்மா பள்ளிவாசல் லேன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?..................................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 20.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்..................................

முகவரி..................................

தொலைபேசி..................................

தே.அ.அ.இல..................................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சகநிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305,Kasthuriyar Road,Jaffna.
T.P.021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணக் கல்வித்திணைக்களத்தால் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு திருக்குறள் மனனப்போட்டி

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக்கல்வி மாணவர்களின் மொழித் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் திருக்குறள் மனனப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் தரம் 1 மாணவர்கள் அதிகாரம் 2 -வான்சிறப்பு , அதிகாரம் 8- அன்புடைமை ஆகிய அதிகாரங்களில் உள்ள குறள்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்து திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு நடுவர்களால் கேட்கப்படும் நான்கு குறள்களை தெளிவாகக் கூறவேண்டும்.

தரம் 2 மாணவர்கள் அதிகாரம் 8 - அன்புடைமை, அதிகாரம் 10 -இனியவை கூறல், அதிகாரம் 7 -மக்கட்பேறு ஆகிய அதிகாரங் களில் உள்ள குறள்கள் அனைத்தையும் மனப் பாடம் செய்து திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு நடுவர்களால் கேட்கப்படும் ஆறு குறள்களை தெளிவாகக் கூற வேண்டும்.

தரம் 3 மாணவர்கள் அதிகாரம் 9-விருந் தோம்பல் , அதிகாரம் 10 -இனியவை கூறல், அதிகாரம் 14 -ஒழுக்கமுடைமை, அதிகா ரம் 16-பொறையுடைமை ஆகிய அதிகாரங்களில் உள்ள குறள்கள் அனைத் தையும் மனப்பாடம் செய்து திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய் யப்பட்டு நடுவர்களால் கேட்கப்படும் 8 குறள் களை தெளிவாகக் கூறவேண்டும்.

தரம் 4 மாணவர்கள் அதிகாரம் 19-புறங் கூறாமை , அதிகாரம் 30 -வாய்மை, அதி காரம் 32 -இன்னா செய்யாமை , அதிகாரம் 44 -குற்றம் கடிதல், அதிகாரம் 45-பெரி யோரை துணைக்கோடல் ஆகிய அதிகாரங் களில் உள்ள குறள்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்து திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு நடுவர்களால் கேட்கப் படும் குறள்களை தெளிவாகக் கூறுவதோடு அவற்றின் பொருளையும் கூற வேண்டும்.

தரம் 5 மாணவர்கள் அதிகாரம் 13- அடக்கமுடைமை, அதிகாரம் 20 -பயனில செல்லாமை , அதிகாரம் 25 -அருளு டைமை, அதிகாரம் 30 -வாய்மை, அதிகாரம் 42 - கேள்வி, அதிகாரம் 44- குற்றம் கடிதல் ஆகிய அதிகாரங்களில் உள்ள குறள்கள் அனைத் தையும் மனப்பாடம் செய்து திருவுளச் சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டு நடுவர்களால் கேட்கப்படும் பத்துக்குறள்களை தெளிவாகக் கூறுவதோடு அவற்றின் பொர்ருளையும் கூறவேண்டும்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் பாடசாலை மட்டத்தில் போட்டி நடாத்தப்பட்டு ஒவ்வொரு தரத்திலும் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவரை கோட்ட மட்டத் தெரிவுக்கு அனுப்புதல் வேண்டும்.

கோட்ட மட்டப்போட்டி எதிர்வரும் செப்டெம் பர் 30ஆம் திகதிக்கு முன் நடத்தி ஒவ்வொரு தரத்திலும் முதல் மூன்று மாணவர் வீதம் தெரிவு செய்து வலய மட்டத்தெரிவுக்கு அனுப் புதல் வேண்டும்.

வலய மட்டத்தெரிவு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் நடாத்தப்பட்டு ஒவ்வொரு தரத்திலும் முதலாம் இடத்தைப் பெற்ற ஒரு மாணவரை மாகாண மட்ட தெரி வுக்கு அனுப்பி வைக்கவும். மாகாண மட்டத் தெரிவுகள் செப்டெம்பர் 15ஆம் திகதி நடை பெறவுள்ளது. பாடசாலை மட்டப்போட்டி களில் அனைத்து ஆரம்பக் கல்வி மாண வர்களும் பங்கு பற்ற வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

வலய மட்டப்போட்டி முடிபுகளை மாகா ணக் கல்வி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். சான்றிதழ்கள் ஆங்கில மொழியில் எழுதப்படுவதால் மாகாண மட் டப்போட்டியில் பங்கு பற்றுபவர்களது பெய ரை தெளிவாக ஆங்கில பெரிய எழுத்துக் களில் எழுதி அனுப்புதல் வேண்டும்.

மாகாண மட்டத் தெரிவுக்கு வரும் மாண வர்கள் ஒவ்வொருவரும் தமது அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம் ஒன்றை கட்டாயமாக கொண்டுவர வேண்டும் என்று வடமாகாணக்கல்விப் பணிப்பாளர் ப.விக் னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# உலக காசநோய் தினத்தை முன்னிட்டு கட்டுரை, ஓவியப்போட்டிகள்

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு தேசிய மாவட்டத்திலான கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி என்பன நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப்போட்டியில் பிரிவு I இல் 10 வயது தொடக்கம் 14 வயதுக்குட்பட்டவர் களும் பிரவு II இல் 15 வயது தொடக்கம் 19 வயதிற்குட்பட்டவர்களும் பிரிவு III இல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களும் பங்குபற்ற முடியும்.

கட்டுரை 1500 சொற்களை உள்ளடக் கியதாக அமைதல் வேண்டும்.

ஓவியப்போட்டியில் பிரிவு I இல் 10 வயது தொடக்கம் 14 வயதிற்குட்பட்டவர்களும் பிரிவு II இல் 15 வயது தொடக்கம் 19 வயதுக் குட்பட்டவர்களும் பிரிவு III இல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களும் பங்குபற்றலாம். ஓவியங் கள் 17 × 23 அளவினை உடைய தாக அமை தல் வேண்டும்.

இப்போட்டிக்கு பாடசாலை போட்டியாளர் கள் பிறந்த திகதி மற்றும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பொறுப் பதிகாரி, மார்புநோய் சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி வைத்திய கலாநிதி ரி.எஸ். யமுனாநந்தா அறிவித்துளார்.

தேசிய ரீதியிலான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதால் அதிபர் கள் மாணவர்களை ஊக்கப்படுத்தி இப் போட்டியில் பங்குபற்ற வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (ஸ்ரீ-3)


## யாழ் நகரில் மிகக்குறைந்த கட்டணங்களில்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now

100% நல்ல சம்பளம்

FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT

FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)

FOUNDATION DIPLOMA IN MANAGEMENT

Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்

IELTS (International English Language Testing System) (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months

We Gurantee Minimum 6.5 Band upwards

Diploma in English [2 Months] Advanced Diploma in English [2 Months]

100 % பயிற்சி 100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPONSOR/SETTLEMENT VISA - EXAMS

பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.

Duration : 2 Months

புதிய பிரிவு 03-03-2011

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே நேரில் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)

Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

திகதி 27-02-2011 / 04-03-2011 காலை : 10.00 மணி மாலை : 03.00 மணி

(சி-2524)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா கந்தையா



தொட்டிலடி சண்டிலிப் பாயை பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லம்மா 28.02.2011 திங்கட்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலம்சென்ற வர்களான கணபதி-பொன்னி தம்பதியரின் அன்பு மகளும், கந்தையாவின் பாசமிகு மனைவியும், இராசலட்சுமி, நாகம்மா, சரஸ்வதி, மாணிக்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கலைவாணி (ஜேர்மனி), ஜெசீதன் (ஆசிரியர்), ஜெயாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வரதராஜன்(ஜேர்மனி), றஜிதா (ஆசிரியர்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை (03.03.2011) அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்லூரி வீதி, சண்டிலிப்பாய் மத்தி. (3917)

தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு
ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலைய வளர்ச்சிக்காக நடத்தப்படும்

மாபெரும் கலைநிகழ்வுகள்

மாவையூர் கலாபூசணம்
வே.சிதம்பரநாதன் குழுவினருடன்
ம.தைரியநாதன் இணைந்து பெருமையுடன் வழங்கும்
உண்மைக்கு உயிர்கொடுத்த

"அரிச்சந்திர மயான காண்டம்"

யாழ். புகழ் நல்லூர் ராகம்ஸ் இசைக்குழுவினர்
பெருமையுடன் வழங்கும்

"இன்னிசை கானம்"

ஒலி, ஒளி அமைப்பு: ராஜன், கற்பொக்கணை, கந்தரோடை.

காலம் : 02.03.2011 (புதன்)
நேரம் : மாலை 6.30
இடம் : கோப்பாய் மத்தி ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலைய முன்றல் (கல்வியியற் கல்லூரி அருகாமை)

இந்நிகழ்வு சிறப்புற நடைபெறுவதற்கு அனுசரணை வழங்குவோர்:

Bestly Cordial
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி.
T.P.:0770584107

அம்பாள் வேலைத்தளம்
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி.
T.P.:0776687522

தேவா மாலிஸ்-41 அழகுச் சோலை-41
இராசவீதி, பாற்பண்ணைச் சந்தி, திருநெல்வேலி.
T.P.:0770488522

ஆறுமுகம் சிற்பாலயம்
திருநெல்வேலி.
T.P.:021 2222892

ராஜன் சிற்பாலயம்
திருநெல்வேலி.

SUBRA TOURS
8/6, Pickering Road, Colombo-13.
T.P.:0777271312

செல்லத்துரை மரத்தொழிலகம்
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி.
T.P.:0772478348

கஜன் தச்சுத் தொழிலகம்
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி.
T.P.:0779231535

JAFFNA ELECTRICAL
94(6), Stanly Road, Jaffna.
T.P.:021 222 2363

CITIZEN TRAVELS
தேவன் அரைக்கும் ஆலை
மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி.

கிருஷ்ணா கபே
இராசவீதிச் சந்தி. கிருஷ்ணன் கோயில்.

பவானி களஞ்சியம்
இராஜவீதி, கரந்தன்

MICRO ELECTRICAL
Stanly Road, Jaffna.
T.P.: 021 222 8345

சண் மரக்காலை
காளி கோவிலடி, கோப்பாய் மத்தி.
T.P.: 021 300 6476

கரிகணன் பிறிண்டேர்ஸ்
424, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2717

Midea Electro Mark
1-1-H, Stanly Road, Jaffna.
T.P.: 021 222 4566

அனைவரும் வாரீர்! ஆதரவு தாரீர்!!

(3911) நிர்வாகம்

# சிவராத்திரிவிழா

இந்து சமயக்கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் சிவராத்திரிவிழா இன்று புதன்கிழமை காரைநகர் சிவகாமி அம்மன் ஆலயத்தில் இந்து சமயக் கலாச்சார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் திருமதி புஸ்பராணி சந்திரராசா, சிறப்பு விருந்தினராக சிவஸ்ரீ தே.சோமசுந்தரக் குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிவராத்திரியின் சிறப்பு பற்றி தொடர்ந்து உளவளதுணையாளர் ச.நவராஜா சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளாார் (ஸ்ரீ-9)

★ ★ ★

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தானத்தில் மகா சிவராத்திரி தினமான இன்று விசேட அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நான்கு சாமப் பூசைகளும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-9)

★ ★ ★

வழக்கம்பரை தொல்புரத்திலுள்ள சிவபூமி முதியோர் இல்லத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-9)

★ ★ ★

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி உற்சவம் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி நான்கு சாமமும் கும்ப அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன.

மறுநாள் காலை திருவூஞ்சல் உற்சவத்தை தொடர்ந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவ நிகழ்வும் இடம்பெறும். (ஸ்ரீ-9)

★ ★ ★

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ கண்ணா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று புதன் கிழமை மாலை 6 மணி முதல் சிவராத்திரி பூசைகள் நடைபெறவுள்ளன.

இத் திரு விழாவில் விரத வழிபாடுகளைத் தொடர்ந்து *சிவராத்திரி தின மகிமை* எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (ஸ்ரீ-9)

★ ★ ★

ஊரெழு சக்தி புரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை நடத்தும் மகா சிவராத்திரிவிழா இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு நிலைய புதிய விழாத்திடலில் மன்றத் தலைவர் நா.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு தொழில்துறை அமைச்சின் ஊடக செயலாளர் எம். நடேசலிங்கம்,சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய அதிபர் த.சற்குண சர்மா,யாழ். ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் கி.கிரிதரன்,ஈவினை தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன்,யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் நாக.தமிழிந்திரன் , நாகரட்ணம் அன்கே. உரிமையாளர் நவரட்ணராஜா, ஊரெழு கிராம அலுவலர் ரி.வரதரா ஜன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-9)

# பொதுக்கூட்டம்

பாசையூர் புனித அந்தோனியார் சன சமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நிலையத் தலைவர் பி.யூட்ஸ் கொலின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை றோய் பேடினன் அடிகள் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (ஸ்ரீ-3-51)

Flex Travels வழங்கும் FREE AIR TICKET உடன்

IELTS இன்றி
Spot Admissions
மூலம் UK இல்
உயர் கல்வி



West End College London

திகதி : 26th March 2011
இடம் : 4, IBC Road, Colombo 6.
நேரம் : 10.00am to 4.00pm

VISA பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எமது சேவை முற்றிலும் இலவசம்

For appointment please contact :
0777-761346
0775-952607
4, IBC Road, Wellawatte, Colombo 6.

flex Institute
Step Towards a Bright Future

E-mails> flexinstitute@sltnet.lk
kiru@flexinstitute.lk
ashwinee@flexinstitute.lk

Web: www.flexinstitute.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நிலநடுக்க அளவுகோல்

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் இயற்பியல் பேராசிரியராக ஒருத்தர் இருந்தார். அவருடைய பெயர் எப் ரிக்டர்.

அவர் நிலநடுக்கங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்பவர். ஒவ்வொரு ஆண்டும் 200 இற்கும் அதிகமான நிலநடுக்கங்களை பற்றி அவர் ஆய்வு செய்திருக்கின்றார்.

ஓரிடத்தில் எவ்வளவு நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எப்படிச் சொல்வது?

அதற்காக அவர் ஒரு அளவு மானியை உருவாக்கினார். அதன்பின் எந்த இடத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டாலும் அந்த அளவுகோளை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள். அவருடைய பெயரையும் அதற்கு வைத்தார்கள். அதுதான் ரிக்டர் அளவுகோல். 1 என்ற எண்ணுடன் ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு அலகும் முந்தையதைவிட பத்து மடங்கு பெரியது.

இதைக் கணனித்துறையில் "லாக்ரத முறை" என்று சொல்கிறார்கள். ரிக்டர் அளவுகோளை கண்டுபிடித்த சார்ள்ஸ் பிரான்சிஸ் ரிக்டர் அமெரிக்காவில் ஒவறியோ என்ற இடத்தில் 26.4.1900 இல் பிறந்தார். 1927 இல் கலிபோர்னியாவில் உள்ள பாசடேனா என்ற இடத்தில் நிலநடுக்க ஆய்வு கூடத்தில் பணியைத் தொடங்கினார்.

1928 இல் கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்விக்கழகத்தில் இயற்பியல் பாடத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். கால்டெக்கிலுள்ள நிலநடுக்கவியல் ஆய்வுக்கழகத்தில் 1936 முதல் 1970 வரை பேராசிரியராக பணியாற்றினார்.

இக்கால கட்டத்தில்தான் அவர் நிலநடுக்கத்தை கணக்கிடுவதற்கு அளவுகோல் ஒன்றை உருவாக்கினார்.

கலிபோர்னியாவிலுள்ள அல்டாடேனா என்ற இடத்தில் 1985 ஆம் ஆண்டு தனது 85 ஆவது வயதில் காலமானார்.

நிலநடுக்கம் அவ்வப்போது ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

1999 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தைவானில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது . அதில் 2 ஆயிரத்து 400 பேர் இறந்தனர்.

அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.6 என்று பதிவாகி இருக்கிறதாம்.

கடந்த 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் குஜராத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 7.9 எனப் பதிவாகியது.

தைவானில் பதிவானதைவிட இது அதிகம். அதனால் அதன் விளைவு அதிகம் என்று அர்த்தம் இல்லை. ஏன்னெனில் ரிக்டர் அளவுக்கும் விளைவுக்கும் சம்பந்தமில்லை.

பூமியிலிருந்து எவ்வளவு சக்தி வெளிப்பட்டிருக்கிறது என்பதை குறிப்பதுதான் இந்த அளவுகோல்.

இந்த அளவுகோலில் 2 அல்லது அதற்குக் கீழே நிலநடுக்கம் பதிவாகியிருந்தால் அதில் இலேசான நிலநடுக்கம் என்று பெயர்.

இதை சாதாரணமாக மக்கள் உணர்வதில்லை. அது வருவதும் போவதும் நமக்குத் தெரியாது. அதற்கு மேல் பதிவானால் அதை நம்மால் உணர முடியும்.

1950 இல் இந்தியாவில் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 8.5 ரிக்டர். 1960 இல் சான்பிறான்ஸிஸ்கோவில் ஏற்பட்ட பூகம்பம் 8.3 ரிக்டர். 1985 இல் மெக்சிக்கோவில் ஏற்பட்ட பூகம்பம் 8.1 ரிக்டர். 1964 இல் புனித வெள்ளி அன்று அலெஸ்காவில் ஏற்பட்ட பூகம்பம் 8 ரிக்டர். 1976 யூலை மாதம் 28 ஆம் திகதி சீனாவில் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பம் 7.8 ரிக்டர்.

ஆனால், விளைவு பயங்கரம். 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் இறந்தனர்.1556 இல் சீனாவில் ஒரு பூகம்பம் ஏற்பட்டதாம். அதாவது சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டது. அப்போதெல்லாம் ரிக்டர்அளவுகோல் என்றால் என்னவென்றே தெரியாது. இருந்திருந்தால் 9 என பதவாகியிருக்கும்மென சொல்கிறார்கள்.

அப்போது 8 இலட்சத்து 30 ஆயிரம் பேர் இறந்தனர். ஆகா... பூகம்பம் என்றால் பயங்கரம்தான். மனிதன் இயற்கையைப் புரிந்துகொண்டு அதை அனுசரித்து வாழக்கற்றுக் கொள்ள வேண்டும். அது தான் முக்கியம்.

ஒரு ஊரில் ஒருத்தர் இருந்தார். அவருக்கு 5 வயதில் ஒரு பையன் இருந்தான். மகா குறும்பு. அந்த ஊரில் பூகம்பம் வரப் போகிறது என்று சொல்லிவிட்டார்கள். உடனே அவர் தன் பிள்ளையை அடுத்த ஊரில் உள்ள உறவினர் வீட்டில் கொண்டு போய்விட்டார்.

"10 நாள் கழித்து வந்து கூட்டிக் கொண்டு போகிறேன். அதுவரைக்கும் பையனைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

இவர் வந்த மறுநாளே உறவினரிடமிருந்து ஒரு தந்தி வந்தது.

அதில் "உடனடியாக வந்து உங்களுடைய பையனை அழைத்துக் கொண்டு போய்விடுங்கள். அதற்கு பதிலாக பூகம்பத்தை வேண்டுமானால் இங்கே அனுப்பி வையுங்கள்" என்று இருந்தது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடகடல் நிறுவனத்துடன் மேலுமிரு நிறுவனங்கள் இணைக்கப்படவுள்ளன

குருநகர் வடகடல் நிறுவனத்துடன் அம்பாந்தோட்டையிலுள்ள வீரவில மற்றும் புத்தளத்திலுள்ள நுணுவல ஆகிய இரண்டு நிறுவனங்கள் இணைக்கப்படவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடகடல் நிறுவனமானது மீன்பிடிவலைகளை உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். இந்த நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் மீன்பிடிவலைகள் மூலமே வடமாகாணத்திலுள்ள மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

மேலும் இந்த நிறுவனத்தை முன்னேற்றும் நோக்குடன் அம்பாந்தோட்டை , புத்தளம் ஆகிய மாவட்டத்திலுள்ள மீன்பிடிவலைகள் உற்பத்தி செய்யும் இரண்டு நிறுவனங்கள் இணைக்கப்படவுள்ளது.

வடமாகாண மீன்பிடித் தேவைகளுக்கு போதுமான அளவில் வடகடல் நிறுவனத்தால் வலைகள் உற்பத்தி செய்ய முடியாத நிலை காரணமாகவே இந்த இரண்டு நிறுவனங்களும் இணைக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் சீனோர் நிறுவனத்தின் கீழ் இயங்கிவந்த மேற்படி இரண்டு நிறுவனங்களும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் கீழ் எதிர்வரும் காலங்களில் இயங்க வுள்ளன.

மேற்படி இரண்டு நிறுவனங்களையும் வடகடல் நிறுவனத்துடன் இணைப்பது தொடர்பாக உயர்மட்டப்பேச்சு இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# வானோர் விடுதூது நாடக ஆற்றுகை

(கொழும்புத்துறை)

திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கும் "வானோர் விடுதூது" எனும் நாடக, நடன கலைப்படைப்பு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.15 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூதுக் கலையகத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவாக்கம், நெறியாள்கையில் அமைந்த இப்படைப்பு தூதுச்சிற்றிலக்கியத்தின் சாயலைக் கொண்டு இயேசுவின் வாழ்வோடு தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய நாடக ஆற்றுகை ஆகும். (ஸ்ரீ-3-51)

# யாழ்.மாநகரசபையால் வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் குன்றும் குழியுமாக காணப்பட்ட வீதிகள் யாழ். மாநகர சபையினரால் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக கன்னாதிட்டி வீதி மற்றும் வைத்தியசாலை வீதி நேற்று முன்தினம் தொடக்கம் மாநகரசபைப் பணியாளர்களால் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது (ஸ்ரீ-3-51)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 210 | 300 | 220 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 250 |
| தக்காளி | 120 | 160 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 150 | 180 | 110 |
| பூசணி | 70 | 60 | 60 |
| புடோல் | 70 | 90 | 70 |
| வாழைக்காய் | 40-45 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 300 | 100 |
| பெரிய வெங்காயம் | 85 | 70 | 70 |
| பாகற்காய் | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 110 | 120 | 110 |
| கருணைக் கிழங்கு | - | 70 | 60 |
| பயற்றங்காய் | 260 | 180 | 150 |
| லீக்ஸ் | 120 | 150 | 120 |
| பீற்றூட் | 70 | 80 | 80 |
| கறிமிளகாய் | 130 | 180 | 180 |
| முருங்கைக்காய் | - | 600 | - |
| போஞ்சி | 130 | 150 | 140 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 180 |
| கீரை – 1 பிடி | 5-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# இராசி பலன்

*02.03.2011*
*(மாசி 18, புதன்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு*
*திரியோதசி முன்னிரவு 11.14 மணிவரை*
*திருவோணம் முன்னிரவு 10.21 மணிவரை*
*இராகுகாலம் 12.27-1.57 மணிவரை*
*சுபநேரம் 4.57-6.27 மணிவரை*
*பிரதோச விரதம், மகாசிவராத்திரிவிரதம்*
*கீரிமலை நகுலேஸ்வரத் தேர்.*

**மேடம்** நந்தி வழிபாட்டால் நலம் காண வேண்டி நாள், தொழில்ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், ஒளிமயமான எதிர்காலத்திற்கு அத்திவாரம் அமைக்கும் நாள்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று இனம் புரியாத சந்தோசம் குடிக்கொள்ளும், முன்னோர் சொத்துக்களில் இருந்தவில்லங்கங்கள் விலகும், சிவன் வழிபாடு இன்பம் தரும்.

**மிதுனம்** ஆலயவழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பேச்சில் நிதானம் தேவை, பிரயாணத்தில் பொருட்களில் கவனம் அவசியம், தேவையற்ற செலவுகள் ஏற்படலாம்.

**கடகம்** உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும்நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** வழிபாட்டால் செல்வம் வந்து சேரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள், பழையகடன்கள் வசூலாகும், சுவாரஸ்யமான நாள், புதிய முயற்சி வெற்றியளிக்கும்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம்கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளால் ஏற்படும் செலவுகளைக் குறைக்கும் எண்ணம் மேலோங்கிவிடும் விதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்** கோயில் வழிபாட்டில் குதூகலம் காணவேண்டிய நாள், தாய்வழி ஆதாயம் பெருகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர், பாராட்டும் புகழும் கூடும், உயர்ந்த மனிதர்களின் சந்திப்புண்டு.

**தனுசு** அரசு செல்வாக்கு அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சிகூடும் நாள், நடைபெறாது என்று நினைத்த காரியம் ஒன்று நல்லபடியாக நடக்கும், பேச்சுசைக் குறைத்து செயலின் மூலம் காட்டும் எண்ணம் மேலோங்கும்.

**கும்பம்** இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும், புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், மாலைநேரம் மகிழ்ச்சிக்குரிய சம்பவம் ஒன்று நடைபெறலாம்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், கூட்டு முயற்சி வெற்றியளிக்கும், நந்தி வழிபாடு நன்மை தரும், போசன சுகமுண்டு, பொருளாதார நிலை உயரும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி ஆணைக்குழுவுக்கான பெயர்கள் பரிந்துரை

(கொழும்பு)

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவான பாராளுமன்ற பேரவையின் கீழ் அமைக்கப்படவுள்ள அரச நிதி ஆணைக் குழுவுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் பாராளுமன்றப் பேரவைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சு செயலாளர் ஒருவரின் பெயர் இந்த ஆணைக் குழுவின் தலைவராக பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே, மூன்று சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் பாராளுமன்ற பேரவைக்கு அனுப்பப்பட்டிருந்தன. அந்த வகையில் எதிர்வ ரும் உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் பாராளுமன்ற பேரவைக்கு கீழ்வரும் சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சுயாதீன ஆணைக் குழுக்கள் விடயத்தில் சற்று காலதாமதமாகிவிட்டது என்பதனை ஏற்றுக்கொள்வதாகவும் ஆனால் விரைவில் சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அண்மையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

உள்ளூராட்சி தேர்தல் முடிவுற்றதும் சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

(ஸ்ரீ-2)

# புகையிரத திணைக்களத்துடன் தொடர்புகொள்ள தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

(கொழும்பு)

புகையிரத திணைக்களத்துடன் 24 மணி நேரமும் பயணிகள் தொடர்பு கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் முகமாக தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கமயின் பணிப்புரைக்கு அமைய கொழும்பில் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய வகையில் பயணிகளின் நன்மை கருதி இந்தத் தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி அவசர தேவையின் நிமித்தம் பயணிகள் 0113135202 என்ற தொலைபேசி இலக்கத்துடன் கட்டுப்பாடு அலுவலகத்தை தொடர்பு கொள்ள முடியும்.

புகையிரத சேவை தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு 0112434 215 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் புதிய முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க 0714393310 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முறையீடுகளை 01131347 57 மற்றும் 011 2421281 என்ற இலக்கங்களுக்கு தெரிவிக்க முடியுமென வும் திணைக்கள அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# தேர்தல் சட்டங்களை மீறிய 97 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டங்களை மீறிய 97 பேர் இது வரை பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் தொடர்பில் 80 முறைப் பாடுகள் பொலிஸில் முன்வைக்கப் பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன குறிப்பிட்டுள் ளார்.

இவற்றின் 3 துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களும் அடங்குகின்றன. ஏனைய முறைப்பாடுகள் சிறிய அளவிலான சம்பவங்கள் தொடர்பானவை எனவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)



பாசையூர் மேற்கு(ஜே/65) மாதர் சங்கத்தினால் மீளளிப்பு முறையில் பயனாளிகளுக்கான துவிச்சக்கரவண்டிகள் கையளிக்கப்பட்டன. இதில் யாழ். பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் நா. தனேந்திரன் பயனாளி ஒருவருக்கு துவிச்சக்கரவண்டியை கையளிப்பதையும் அருகில் சங்கத்தலைவி, பொருளாளர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# உயர்தர மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டல் நிகழ்வு

(கொழும்பு)

நீதி, நியாயத்திற்கான மாணவர் அமைப்பினால் க.பொ.த உயர் தர இரசாயனவியல் பாட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் மற்றும் ஊக்குவிக்கும் நிகழ்வு இன்று புதன் கிழமை காலை 8.30 மணிக்கு கி/கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்புத் தமிழ் கல்விவளாக ஆசிரியர் இ.றஞ்சன் வளவாளராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான வழிகாட்டல் களை வழங்கவுள்ளார்.

எனவே, இந்நிகழ்வில் அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# தேசிய சிவராத்திரி விழா

இந்துசமய அலுவல்கள்திணைக் களத்தால் நடாத்தப்படும் தேசிய சிவ ராத்திரி விழா இம்முறை ஒட்டு சுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்து சமய அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் டி.எம். ஜயரட்ன கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் சைவப் புலவர் பொன்.சுகந்தனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

(ஸ்ரீ-3)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.03 02

★ 986 - பிரான்சின் மன்னனாக ஐந்தாம் லூயி முடிசூடினான்.

★ 1807 - அடிமைகளை நாட்டுக்குள் கொண்டு வருவதை தடைசெய்யும் சட்ட மூலம் அமெரிக்க காங்கிரசில் கொண்டு வரப் பட்டது.

★ 1815- கண்டி ஒப்பந்தம் என வழங்கப் படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டது. சிறை பிடிக்கப் பட்ட ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப் பப்பட்டான்.

★ 1823- தமிழ்நாடு, ஸ்ரீ பெரும்புதூரில் நில நடுக்கம் ஏற்பட்டது.

★ 1836- டெக்சாஸ் குடியரசு மெக்சிக்கோவி டம் இருந்து விடுதலையை அறி வித்தது.

★ 1855- இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்யா வின் சார் மன்னனாக முடிசூடினான்.

★ 1896- எதியோப்பியா ஆட்வா என்ற இடத் தில் வைத்து இத்தாலியைத் தோற் கடித்தது. ஓர் ஆபிரிக்க நாடொன் றினால் காலனித்துவ நாடொன்றின் படைகள் தோற்கடிக்கப்பட்டமை இதுவே முதல் முறையாகும்.

★ 1917- புவேர்ட்டோரிக்கன்களுக்கு ஐக்கிய அமெரிக்கக் குடியுரிமை வழங்கப் பட்டது.

★ 1919- அனைத்துலக கம்யூனிஸ்டுகள் முதல் தடவையாக மொஸ்கோவில் கூடின.

★ 1935- சியாம் மன்னார் பிரஜாதிபோக் (ஏழாவது ராமா) முடிதுறந்ததையடுத்து அவரது 9 வயது மருமகன் ஆனந்த மஹிதோல் (எட்டாவது ராமா) மன்னரானார்.

★ 1941- இரண்டாம் உலகப் போர்: முதலாவது ஜேர்மனியப் படைகள் பல்கேரியாவினுள் நுழைந்தன.

★ 1943- இரண்டாம் உலகப் போர்: பிஸ்மார்க் கடல் சமரின் போது அமெரிக்க மற் றும் அவுஸ்திரேலியப் படைகள் ஜப் பானியக் கப்பல்களை தாக்கி மூழ் கடித்தன.

★ 1946- ஹோ சி மின் வட வியட்நாமின் ஜனாதிபதியானார்.

★ 1956- மொரோக்கோ பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1958-தி.மு.க. மாநிலக் கட்சியாக அங் கீகரிக்கப்பட்டது.

★ 1962-பர்மாவில் இராணுவ ஜெனரல் நெ வின் (Ne Win) இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

★ 1970-ரொடீசியா பிரித்தானியாவிடம் இருந்த பிணைப்பைத் துண்டித்து தன்னைக் குடியரசாக அறிவித்தது.

★ 1972- நாசாவின் பயனியர் 10 விண்கலம் வெளிக்கோள்களை ஆராய்வதற்காக புளோரிடாவில் இருந்து ஏவப்பட் டது.

★ 1991-இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தொலைவில் இருந்து இயக்கிய கார்குண்டு ஒன் றின் மூலம் கொலை செய்யப்பட் டார்.

★ 1990- ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.

★ 1992- உஸ்பெக்கிஸ்தான், மல்தோவா ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.

★ 1995- யாஹூ! தொடங்கப்பட்டது.

★ 1998- ஜுப்பிட்டரின் சந்திரனான யூரோப்பாவில் அடர்ந்த பனிக்கட்டியின் கீழ் திரவநிலையில் கடல் இருப்பதாக கலிலியோ விண்கலம் தகவல் அனுப் பியது.

★ 2002- ஆப்கானிஸ்தான் மீதான ஐக்கிய அமெரிக்காவின் அனகோண்டா தாக்குதல் ஆரம்பமாகியது.

## பிறப்புக்கள்

★ 1896- ரா.பி.சேதுப்பிள்ளை, தமிழறிஞர் (இ.1961)

★ 1931- மிக்கைல் கொர்பசோவ், சோவியத் ஒன்றிய முன்னாள் தலைவர்

★ 1935- குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (இ.2008)

## இறப்புக்கள்

★ 1791- ஜோன் வெஸ்லி, மெதடிஸ்தத்தை அறிமுகம் செய்தவர் (பி.1703)

★ 1930- டி.எச். லோறன்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி-1885)

★ 1949-சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை, கவிக்குயில் (பி.1879)



1930- மகாத்மாகாந்தி உப்புச்சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்காக அகமதாபாத்தில் இருந்து குஜராத் கடலோரத்தில் இருந்த தண்டி நோக்கி 240 மைல் நடைப்பயணத்தை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடைச் சிறைச்சாலையை வேறிடத்துக்கு மாற்றத் திட்டம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையை கொழும்பிலிருந்து வெளியிடத்திற்கு கொண்டு செல்ல சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்போது வெலிக்கடைச் சிறைச்சாலை 42 ஏக்ரில் அமைந்துள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. கொழும்பு விளக்கமறியல் சிறை மற்றும் வெலிக்கடை சிறை என்பன புதிய இடத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதிய சிறைச்சாலைகள் நிர்மாணிக்கப்படும் வரை வெலிக்கடைச் சிறையில் உள்ள கைதிகள் மகர மற்றும் கண்டி பல்லேகல உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட சிறைச் சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

அண்மையில் அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சின் மீளாய்வுக் கூட்டத்தின்போது வெலிக்கடைச் சிறைச்சாலையை வேறு இடத்திற்குக் கொண்டு செல்வது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கவிதை,பேச்சுப்போட்டிகளின் முடிபுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது

கொழும்பு கம்பன் கழகம் நடத்தும் அமரர் துரைவிஸ்வநாதன் நினைவு கவிதைப் போட்டி, அமரர் பென் பாலசுந்தரம் நினைவுப் பேச்சுப் போட்டி என்பவற்றின் முடிபுத் திகதிகள் எதிர் வரும் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள் ளது.

35 வயதுக்குட்பட்ட போட்டியாளர்கள் தமது முழுப்பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம்,மாணவராயின் பாடசாலையின் பெயர், கலந்துகொள்ளவுள்ள போட்டி முதலிய விபரங்களைக் குறிப்பிட்டு இலக்கம் 12, இராம கிருஸ்ணன் தோட்டம், கொழும்பு 6 என்னும் முகவரிக்கு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். ஒருவரே இரண்டு போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியும் போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்கு தனித்தனியே அறிவிக்கப்படும்.

மேற்படி கவிதை, பேச்சுப்போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் உடன் வழங்கப்படும் தலைப்புக்களில் கவிதை இயற்றவும் பேசவும் தகுதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். போட்டியாளர்களின் தமிழறிவும் பரிசு தகுதியின் போது கணிக்கப்படும்.

பேச்சு மற்றும் கவிதைப்போட்டிக்கான தலைப்புக்கள் இலக்கியம், கலை, வாழ்வியல் தொடர்பில் அமைந்திருக்கும் எனவும் தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப் பெறும் முதல் 3 போட்டியாளர்களுக்கும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள கம்பன் விழா வில் தங்க, வெள்ளி, வெண்கல பதக்கப் பரிசில்கள் வழங்கப்பெறும் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.

மேலும் போட்டிகளில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-9)

# கிணற்றில் வீழ்ந்த 8 வயதுச் சிறுமியை காப்பாற்றிய 10 வயதுச் சிறுவன்

கிணற்றில் வீழ்ந்த 8 வயது சிறுமியை 10 வயது சிறுவன் காப்பாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் எத்காந்துர பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுப்பிரமணியம் ரமேஷ் என்ற சிறுவனே இவ்வாறு துணிச்சலுடன் செயற்பட்டு 8 வயது அயல்வீட்டுச் சிறுமியை மீட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கயிற்றின் ஒரு முனையை இறப்பர் மரமொன்றில் கட்டி மற்றைய முனையில் ஓர் பக்கட்டைக் கட்டி அதில் குறித்த சிறுமியை அமருமாறு பணித்து சிறுமியை மீட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சிறுமியின் அழுகுரல் கேட்டு கிணற்றைப் பார்த்தபோது சிறுமி தத்தளிப்பதனை குறித்த சிறுவன் கண்டுள்ளார்.

துரித கதியில் செயற்பட்ட சிறுவன் பாதுகாப்பற்ற கிணற்றிலிருந்து சிறுமியைக் காப்பாற்றியுள்ளார்.

குறித்த கிணற்றிலிருந்து 30 வீடுகள் நீர் பெற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய குற்றச்சாட்டை ஜனாதிபதி ஏற்பு

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதென கட்சி குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்ட காரணத்தினாலேயே சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நவீன மயப்படுத்துமாறு ஜனாதிபதி பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு உத்தர விட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்களை சில அமைச்சர்கள் மறுத்தபோதிலும் ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சட்டமா அதிபர் திணைக்களத்தின் பின்னணியில் மறைகரமொன்று செயற்பட்டு வருகிறது

## ஐ.தே.க. பிரதித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு களங்கம் ஏற்படும் வகையில் அதன் உத்தியோகத்தர்கள் செயற்படக் கூடாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

விமர்சனங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களை சுமத்தக்கூடிய வகையில் சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகத்தர்கள் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொனறாகல பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட சில தீர்மானங்களின் பின்னணியில் மறைகரமொன்று செயற்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

15 ஆண்டுகளுக்கு மேல் விசாரணை செய்யப்பட்டு வந்த சில வழக்குகளை சட்டமா அதிபர் திணைக்களம் திடீரென வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளரும் பொலிஸாரும் சுயாதீனமாகச் செயற்படுவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவின் தேர்தல் ஆணையாளரைப் போன்று இலங்கை தேர்தல் ஆணையாளரும் சுயாதீனமாக செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். மக்களின் பணத்தை சம்பளமாகப் பெற்றுக்கொள்ளும் அரசாங்க அதிகாரிகள் சுயாதீனமான செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு அளிக்கப்படும் வாக்குகள் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக அளிக்கப்படும் வாக்குகளாக கருதப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

சரத்பொன்சேகாவை விடுதலை செய்யும் முனைப்புக்கள் கைவிடப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருட்கள் சேவைகளுக்கான விலை வெகுவாக உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# திருமுறைப்பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மகா சிவராத்திரி தினமான இன்று காலை முதல் மாலை வரை ஆலயங்கள் தோறும் சென்று ஈழநாட்டுத் திருப்பதிகங்கள் பாராயணத்தோடு பன்னிரு திருமுறைப் பாடல்களை ஓதவுள்ளனர்.

இந்நிகழ்வில் பங்கு பற்ற விரும்பும் அடியவர்கள் பங்குபற்றலாம் என மன்ற அமைப்பாளர் சி.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# ஆயிரக்கணக்கான ஜிமெயில் பாவனையாளர்கள் அசௌகரியம்

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான ஜிமெயில் பாவனையாளர்கள் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜிமெயில் பாவனையாளர்களின் இன்பொக்ஸ் தரவுகள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் தொடர்புப்பட்டியல் (கன்டாக் லிஸ்ட்) தரவுகள் அழிக்கப்பட்டிருப்பதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான ஜிமெயில் பாவனையாளர்கள் இந்தச் சிக்கலை எதிர்நோக்கியதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை சிறிய அளவிலான பாவனையாளர்கள் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கியதாக ஜிமெயில் மின் அஞ்சல் சேவை வழங்குநர்களான கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. சிலரின் கணக்குகளில் காணப்பட்ட தரவுகள் அழிவடைந்திருந்ததாகவும் அவை நிரந்தரமாக அழிக்கப்பட வில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்தத் தரவுகள் சில மணித்தியாலங்களில் மீள சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுகிறது. 0.08 வீதமான ஜிமெயில் பாவனையாளர்கள் இந்த நெருக்கடியை எதிர்நோக்கியதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை எத்தனை பாவனையாளர்கள் பாதிக்கப் பட்டனர் என்பது குறித்த தகவல்களை ஜிமெயில் வெளியிடவில்லை.

எனினும் 150 தொடக்கம் 200 மில்லியன் பாவனையாளர்களின் கணக்குகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)



யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் நூலகமும் தகவல் தொழில்நுட்பக் கட்டடமும் கனடாவிலுள்ள பழைய மாணவன் சி.இராசதுரையால் அவரது தந்தையான மு.சின்னத்துரையின் ஞாபகமாக அமைக்கப்படவுள்ளது. மேற்படி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிக்காட்டு இதிகாசம் 53



கவிப்பேரரசு வைரமுத்து

மேய்ச்சலுக்கு இடமில்லாம மாடுகள அங்கங்க அலையவிட்டு, காயாம்பு குளத்துல தண்ணி குடிக்க விட்டு தூக்கு வாளியுங் கம்புமா மாடுகள அதட்டி அணச்சு ஓட்டிக்கிட்டு அங்க வந்து சேந்தான் மொக்கராசு. பாத்தாரு பேயத்தேவர். சத்தில்லாம இருக்கான் சவத்தப்பய! ஆனா ஆளு வெட வெடன்னு வளந்துட்டான். இவனுக்கு ஒரு கல்யாணம் காட்சி பண்ற வரைக்குமாவது நான் உசுரொட இருக்கணும். பட்டீர்ன்னு ஒரு யோசனை மூளையில மின்னி மினுக்குன்னுச்சு இந்தப் பயலுக்கு மார்க்க கல்யாணம் பண்ணிட்டா என்ன? சரி! சரியான யோசன. அந்த அனாதப் பயலுக்கு ஒரு கடமையச் செஞ்ச மாதிரியிருக்கும்; கெடைக்கிற மொய்யில கெணறு வெட்டின மாதிரியும் இருக்கும். குத்த வச்சு உக்காந்திருந்த ஆளு குதிச்சு எந்திருச்சாரு; செத்துக்கிடந்த மனசு சிலீர்ன்னு மலந்திருச்சு.

மார்க்க கல்யாணம்ங்கறது வேறொண்ணுமில்ல. பூப்பெய்திய பொண்ணுக்குச் சடங்கு செய்யிறமாதிரி, பயலும் வயசுக்கு வந்துட்டான்னு கொட்டடிச்சுச் சொல்ற கூத்துதான் அது. என்னா ஒண்ணு, பொம்பளை விஷயத்துல அது இயற்கையா நடக்குது; ஆம்பளை விஷயத்துல செயற்கையா நடக்குது. மார்க்க கல்யாணத்துல ஆம்பளைக வெட்கப்படற மாதிரி ஒரு சின்ன வைத்தியம் இருக்கு கல்யாணத்துக்கு மாதிரியே பந்தல்போட்டுத் தோரணம் கட்டிக் கொட்டடிச்சுக் கொலவையிட்டு ரேடியோக்குழாய்க கட்டிப் பாட்டுப் போட்டுப் சலம்பலோடதான் அதுவும் நடக்கும். மத்த விசேசங்கள்ல சம்பந்தப்பட்ட ஆளு சந்தோசமா இருப்பான். இதுல மட்டும் வெட்டுப்படப்போற வெள்ளாடுமாதிரி ஆம்பள தலயக் கவுந்து நிப்பான்.

ஒரு வயசுப் பயலுக்கு ஒரு நாவிதரு அந்தத் தோல வைத்திய முறைப்படி நீக்கி விடற வைபவந்தான் மார்க்க கல்யாணம். அதைத்தான் நம்மராவுத்த மாருக 'சுன்னத்' துங்கிறாக.

மொக்கராசு முதல்ல வெக்கப்பட்டான்; வேணாம்ன்னான். கவுந்தடிச்சுப் படுத்துக் கண்ணீர்கூட விட்டான்.

"ஏலே! மொக்க... பயப்படாதடா... பரம்பரைக்கு உண்டான பழக்கம்தானடா"ன்னு தேத்திப்பாத்தாரு தாத்தா.

பேரன் பாவம்! வாதாடிப் பார்த்தான்.

"நான் பண்ணிக்கிறலேன்னா...?"

"சாமி குத்தமாகிப் போயிருமப்பே!"

"அப்படின்னா சாமி 'அப்படி'யே படைச்சுருக்கலாம்ல... ஏன் 'இப்படி'ப் படைச்சுருச்சு?"

"ஏலே அய்யா! கேக்கற கேள்வி நியாயமிடா... கேக்கற காலம்தாண்டா தப்பு. ஒத்துக்கடா சும்மா அம்மை ஊசி போட்ட மாதிரி 'சுர்'ருங்கும்- அப்பறம் சொகமாயிரும். சரின்னு சொல்றா"

பய அழுதுகிட்டே உறங்கிப் போனான். சாக்குல விழுந்த கண்ணீர்த் துளி சத்தமாப் போடப் போகுது?

பந்தல் போட்டாச்சு; குழாயும் கட்டியாச்சு; பாட்டும் போட்டாச்சு. பெருங்கூட்டமில்லேன்னாலும் வரவேண்டிய ஆளுக வந்து சேந்துட்டாக. மொத மொதலா வேட்டிகட்டி விடுறாக மொக்கராசுக்கு. எப்படிக் கட்டினாலும் நிக்க மாட்டேங்குது கழுத! இறுக்கிக் கட்டினாலும் நிக்கிறதுக்கு இடுப்பு வேணுமா இல்லையா? இல்லாத இடுப்புல வேட்டியும் கட்டி, தண்ணியில போட்டா சுருங்கும்ங்கிற 'தீர்க்க தரிசன'த்துல தொள தொளன்னு தச்சு முடிச்ச பெருஞ்சட்டையும் மாட்டி, கழுத்துல ஒரு சரிகைத் துண்டும், மரிக்கொழுந்து நிறையா வச்சுக் கட்டின ஒரு மல்லிகைப் பூ மாலையும் போட்டு, நெத்தி தெரியாம சந்தனம் அப்பி, அதுல குங்குமத்தையும் குழைச்சுவிட்டு ஊர்வலமா வாரானய்யா மூஞ்சியத் தொங்கப் போட்டு மொக்கராசு. தட்டுல பழம்தேங்கா வச்சுப் பொம்பளைகள்லாம் தலையில சொமந்துவர, உள்ளூரு வெளியூருப் பெருசுகளெல்லாம் கூட்டத்தோட கூட்டமா சொந்தக்கத சோகக்கத பேசிவர, அதுக்கு முன்னால எளவட்டப் பயல்களெல்லாம் மொக்கராசை அள்ளையில குத்தி விளையாடி வர, வயசுக்கு வந்த - வரப்போற பாவாடை தாவணிகளெல்லாம் மொக்கராசை சாடையாப் பாத்து அரை வார்த்தை - கால்வார்த்தையில என்னமோ பேசிச் சிரிக்க அல்லோலகல்லோலப்பட்டது ஊரே.

முதமுதலா வேட்டிகட்னதனால, முட்டி தட்டித் தட்டித் தடுமாறி வாரான் மொக்கராசு.

"ஏய்! நாளைக்கித்தான் மாப்ள தெறப்புவிழா. இன்னைக்கே இந்த நொண்டு நொண்டுறவன்" - மொக்கராசை மடக்கிமடக்கிக் கேலி பண்றானுங்க மாமன் மச்சினன்ங்க.

கொட்டுக்காரன்களும் குழலைக்காரன்களும் நீபெரிசா நான்பெரிசான்னு சத்தம் கிழப்ப, சன்னாசியப்பன் கோயிலுக்கு ஊர்வலமாப் போயி சூடம் கொளுத்திவைச்சு, வாழைப்பழம் கண்தெறந்து, சாம்பிராணி காட்டிசிதறுதேங்கா போட்டு, சாமி கும்பிட்டு ஊர்வலமாத் திரும்பிவந்து, ஊர்பெருசுக கால்லவிழுந்து விழுந்து எந்திருச்சு வீபூதி வாங்கிப் பூசுறப்ப 'ஏய் நிறுத்துங்கடா'ன்னு கூட்டத்துக்குள்ள நுழைஞ்சு குதியாட்டம் போட்டானைய்யா சின்னு.



"மாமன மறந்துட்டாடா மார்க்கச் கல்யாணம் பண்றீக மார்க்க கல்யாணம்...? தாயில்லாமப் பிள்ளையிருக்கா? தாய்மாமன் இல்லாம சடங்கு இருக்கா? சொல்லுங்கப்பா"

சபையில ஒருத்தரும் ஒரு பேச்சும் பேசல

'ஏலே சின்னு... நீ சொல்லுறது வாஸ்தவம் தான்... தாய்மாமன்ங்கிற உரிமையை கேட்குறியே. தாய்மாமனுக்குரிய கடமையைச் செஞ்சுருக்கியா?' - அடித்தொண்டையில் ஆரம்பித்தது ஒரு பெருசு.

"உரிமையைக் குடுத்தாத்தான கடமையச்செய்ய முடியும். தாய்மாமனுக்குச் சொல்லிவிட்டாகளா?"

"இது என்னப்பா கூத்தாருக்கு. விசேசம் தாய்வீட்ல நடந்தா தாய்மாமனுக்குச் சொல்லி விடலாம். தாய்மாமன் வீட்லயேதான விசேசம் நடக்குது. யாரு யாருக்கு சொல்றது?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது முதல்ல தாய்மாமன் கால்ல விழுந்து வீபூதி வாங்கச் சொல்லுங்க அந்த வெங்கம்பயல"

"இம்புட்டுத்தானா. ஏமொக்க! விழுந்து எந்திரிடா ஒம் மாமன் கால்ல"


சின்னுகால்ல மடார்ன்னு விழுந்தான் மொக்கராசு. எண்ணகிண்ண தேய்க்காம சொறிப் பிடிச்சுக் கரண கரணயாக் கிடந்த கால சின்னப் பயகை தொட்டதும் சிலுத்துப் போனான் சின்னு. என்னமோ கொழாயத் தொறந்து விட்டமாதிரி குபுக்குண்ணு கொட்டிடிச்சு கண்ணீரு. விழுந்த பயலத் தூக்கியெடுத்து நெத்தியில வீபூதி இழுகி, பைக்குள்ள கையவிட்டு அழுக்குப்புடிச்ச ஒத்த ரூபா ரெண்டுரூபாத் தாள்ள ஒன்னுரெண்டக் குடுத்துட்டு கண்ணத்துடச்சுக்கிட்டே வந்தவழியே போயிட்டான் சின்னு. என்னமோ தெரியல இவன் விசயத்தில மட்டும் பாறாங்கல்லுப் பழமாயிருது.

பந்திமுடிச்சாச்சு; மொய் எழுதியாச்சு; பந்தல்ல கூடின சனம் கலஞ்சாச்சு இனி விடியக்காலையில தான் அந்தத்தோல் வைத்தியம் நடக்கும். ராத்திரியெல்லாம் உறக்கம் வரல மொக்கராசுக்கு. தோல்வெட்டுவாக இதுல எதுலயுமே அச்சமில்ல அவனுக்கு.

நாளைக்கு உறக்கம் வராதேங்கிற கவலையிலேயே அன்னைக்கு ராத்திரியெல்லாம் உறங்காமக் கிடந்தான் பாவம்.

விடிஞ்சதய்யா அவனுக்கு விடியாத ராத்திரி ஊருமுழுசா முழிக்கல. கோழிகளும் குஞ்சுகளும் வேப்பமரத்துப் பறவைகளும் காச்மூச்ன்னு கத்திச் செல்லச்சண்டை போட்டு சில்மிசம் பண்ணுதுக.

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யா/ அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழாவும் "சதாசிவன்" மலர் வெளியீடும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மங்கல வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதையும் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், இவ்விழாவின் ஏற்பாட்டாளர் சி.காராளப்பிள்ளையை கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் அரசியல் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட வேண்டியது அவசியம்

## அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது என அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் அலக்சாண்டர் தெரிவித்துள்ளார்.**

நிலையான சமாதானத்தை அரசியல் தீர்வுத் திட்டமொன்றின் மூலம் மட்டுமே பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் நாட்டின் சகல மக்களினதும் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒன்று எனவும் உலக நாடுகள் இராஜதந்திர ரீதியிலான ஆதரவினை வழங்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நடைமுறைச் சாத்தியப்பாடுடைய அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.



பாரிய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் உலகின் எந்த மூலையில் நடைபெற்றாலும் அது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## லிபியாவிலிருந்து கிறீஸுக்கு வந்த இலங்கையர்களில் பதினைந்து பேர் மாயம்

(கொழும்பு)

லிபியாவிலிருந்து கிறிஸுக்கு அழைத்து வரப்பட்ட இலங்கையர்கள் காணாமல் போயுள்ளதாகவும் இதனால் கிறீஸ் ஊடாக இலங்கையர்கள் பயணிப்பதற்கான தடை விதிப்பதற்கு கிறீஸ் அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

லிபியாவிலிருந்து கிறீஸுக்கு ஒலிம்பிக் சம்பியன் என்ற கப்பலில் அழைத்து வரப்பட்ட 36 இலங்கையர்களில் 15 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போன இந்த 15 பேரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையில் இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகம் கிறீஸிலுள்ள இலங்கைப் பிரதிநிதியுடன் இணைந்து செயற்படுவதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார். (ஶ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### கர்ப்பூரவள்ளி

**Botanical Name - Coleuis amboinicus.**
**Family - Labiatae**
**Engl- Thick Leaved lavander**
**Sinh- Kappara walliya**


கர்ப்பூரவள்ளியானது சிறிய புதர்ச் செடியாகும். சிறிய உரோமங்களையுடைய அகன்ற, நீள் உருளைவடிவ அல்லது இருதய வடிவ சதைப்பற்று மிக்க, மணமிக்க காம்புகளையுடைய இலைகளைக் கொண்டது. பல மலர்கள் கொண்ட வட்டங்கள் , சிறிய காம்புகளை உடைய மலர்களைக் கொண்டது. புல்லி வட்டத்தின் மேலுதடு நீள் உருளை வடிவமானது. அல்லி வட்டம் வெளிறிய ஊதா நிறமுடையது. அல்லிக் குழலின் கழுத்துப் பகுதி வீங்கியது. மகரந்தத் தாள்கள் குட்டையாக வெளிக்கொணரப்பட்டவை. இதன் கனிகள் சிறியவையாகக் காணப்படும். மலர்களும் கனிகளும் ஆவணி - புரட்டாதி ஆகிய மாதங்களில் அதிகம் காணப்படும்.

**பரம்பலும், இனவிருத்தியும்**

தென்னிந்தியா, ராஜஸ்தான் ஆகிய காடுகளில் தானாக வளர்கின்றது. தண்டுத் துண்டங்கள் மூலம் இனவிருத்தி செய்யலாம். இந்தியா முழுவதும் பயிரிடப்படுகின்றது. வீட்டுத் தோட்டங்களில் பாத்திகளில் அல்லது சாடிகளில் வளர்க்கலாம்.

**மருத்துவப் பயன்கள்**

- இதன் இலைகள் மருத்துவத்தில் பயன்மிக்கவையாக பயன்படுத்தப்படுகின்றது. குழந்தைகளுக்கு உண்டாகும் இருமல், தொண்டை புகைச்சு, புகைச்சு இருமும் நிலைமைக்கு சிறந்த நிவாரணியாகும். இதன் இலைகளை சேகரித்து முக்கியமாக நன்கு கழுவி இடியப்பத்தட்டில் வைத்து ஆவியில் அவித்து சாறுபிழிந்து வடித்து பயன்படுத்துவதே சிறந்ததாகும்.
- குழந்தைகளுக்கு புகைந்து, புகைந்து இருமும் போது முற்கூறியபடி கர்ப்பூரவள்ளிச்சாறு ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து சுத்தமான தேன் ஒரு தேக்கரண்டி வீதம் கலந்து தினம் 3 வேளை கொடுத்து வர நன்கு தணியும்.
- கர்ப்பூரவள்ளிச்சாறு, குன்றிமணி இலைச்சாறு, சின்னவெங்காயச்சாறு ஆகிய ஒவ்வொன்றிலும் 10 துளிகள் சேகரித்து ஒரு



கரண்டியில் விட்டு இலேசாக சூடாக்கி கொள்ளவேண்டும். ஆறியபின்பு அதைத் தேக்கரண்டியளவிற்கு குழந்தைகளுக்கு புகட்டினாலும் வயிற்றுப் பிசமும் அது தொடர்பான மற்றத் தொந்தரவுகளும் அகன்று விடும்.
- குழந்தைகளுக்கு ஏற்படும் கக்குவான் இருமலுக்கு வசம்பை சுட்டுக் கரியாக்கி தூளாக்கி அதில் 100 மி.கிராம் அளவு எடுத்து அதில் கர்ப்பூரவள்ளிச் சாறு நான்கு துளிகள் விட்டுக்கலக்கி ஒருநாளைக்கு 3 வேளை வீதம் தொடர்ந்து சாப்பிட்டுவர குணமாகும்.
- வறட்டு இருமலாக இருந்தால் காலையில் ஒரு தேக்கரண்டி கர்ப்பூரவள்ளிச் சாற்றை அதேயளவு தேன்கலந்து கொடுத்தும் மாலையில் ஒரு தேக்கரண்டி எலுமிச்சம் பழச்சாற்றுடன் அதேயளவு தேன்கலந்தும் அருந்தினால் தணிந்து விடும்.

**எவ்வகையான இருமலுக்கும்**

சட்டியில் ஒரு கைப்பிடியளவு கர்ப்பூரவள்ளி இலை, ஒரு கைப்பிடியளவு மணத்தக்காளி இலையைப் போட்டு வதக்க வேண்டும். பின் வெந்தயம் 20 கிராம், ஏல அரசி 2 கிராம் ஆகியவற்றை அளவாக எடுத்து சிவக்க வறுத்து அதில் 10 கிராம் அளவு வெங்காயத்தை நறுக்கிப் போடவேண்டும். சிவந்து வரும் சமயம் வதக்க மணத்தக்காளி, கர்ப்பூரவள்ளி ஆகியவற்றை இட்டு கிளறி அதில் 1/2 லீற்றர் நீர்விட்டு பாதியளவு சுண்டுமளவு காய்ச்சி குடிநீராக்கி வடித்து ஒருநாளைக்கு 3 வேளைவீதம் ஒரு தேக்கரண்டியளவு சாப்பிட்டுவர 3 நாளில் இருமல் நன்கு குணமாகும்.

- நீர்க்கோலை, தலைப்பாரத்திற்கு கர்ப்பூர வள்ளிச்சாறு, மாதுளம்பூச்சாறு, அருகம்புலச்சாறு இவற்றை சம அளவாகக் கலந்து அதிலிருந்து 30 மில்லி வீதம் தினசரி 3 வேளை குடிக்க நீங்கும். குழந்தைகளுக்கு 5 தொடக்கம் 10 மில்லிவரை பயன்படுத்தலாம்.
- சளியுடன் கூடிய தலைவலிக்கு இதன் நசுக்கப்பட்ட இலைகளில் சாறு பிழிந்து ஓர் இரும்புக்கரண்டியை அடுப்பில் வைத்து நன்கு சூடேறியதும் அதிக மேற்படி சாற்றை விட்டால் அச்சாறு சுண்டி சிவந்து வரும். அதனை வழித்து நெறியில் கனத்த பற்றாகப் போட தலைவலி குணமாகும்.
- கண் அழற்சி இருப்பினும், இதன் இலைகளைக் கழுவி பிழிந்து சாறு எடுத்து வடித்து கண்களைச் சுற்றி பூசலாம்.
- இதன் இலைச்சாறு 200 மில்லி எடுத்து, நல்லெண்ணெய் 150 மில்லியுடன் சேர்த்து அடுப்பேற்றி மெல்லிய தணலில் காய்ச்சி, சாறுவற்றியதும் இறக்கி தலைக்கு தடவிவர மூக்குநீர்பாய்தல் தீரும்.

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)**
**சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம், கைதடி.**

- முக்கிய குறிப்பு யாதெனில் , சாதாரணமாக சளித் தொல்லை ஏற்படும் போது குழந்தைகளுக்கு கைமருந்தாக மேற்கூறியவாறு, கர்ப்பூரவள்ளியை பயன்படுத்துவதோடு , வீட்டுத் தோட்டங்களில் கர்ப்பூரவள்ளியை வளர்ப்பவர்கள் , மேற்படி கர்ப்பூரவள்ளி இலைகளை சேகரித்து நன்கு கழுவி, வாட்டி சாறு பிழிந்து வடித்து எடுத்துக் கொள்ளவும்.

வடித்த சாறு 100 மில்லிக்கு 300 கிராம் பனைவெல்லம் சேர்த்து கரைத்து அடுப்பேற்றி காய்ச்சி மணம்வரும் சமயம் இறக்கி புட்டிலடைத்து வைத்துக் கொள்ளவும். குழந்தைகளுக்டு ஒரு தேக்கரண்டி வீதம் 3 வேளை பயன்படுத்தலாம்.


- அம்மை கொப்பளங்களுக்கு இதன் இலைகளை வாட்டி பிழிந்து சாற்றை வடித்து பூசிவர கொப்பளங்கள் விரைவில் ஆறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்கும் யோகம் யாருக்கு?

**வா**கன, வீடு யோகம் என்பது ஒவ்வொரு வருக்கும் இன்றியமையாத ஒன்றாகும். சில ருக்கு பிறக்கும் போதே சொந்த வீட்டில் பிறக் கும் யோகம் கிடைக்கும். சில ஜாதகர்களுக்கு தங்கள் சுய உழைப்பால் வீடு வாங்க கூடிய யோகம் அமையும். இதில் பலவிதமான யோகங்களைப் பார்க்கிறோம்.

சொந்த வீட்டில் பிறந்து வாடகை வீட்டில் வசிப்பவர்கள், சிறிய இல்லத்தில் பிறந்து வளர்ந்த பின் அரண்மனை போன்ற வீட்டில் வசிப்பவர்கள், சொந்த வீடு வாங்கி இடை யில் வாடகை வீட்டில் குடியிருந்து, சொந்த வீட்டை விற்று விடுபவர்கள், வீடு வாங்கி கடன்பட்டு, அதன் பின் மனையை விற்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள், அதே நேரத்தில் மனையை விற்பதால் தொழிலில் வளர்ச்சி, கடன் அடைதல் போன்ற நிலையை சந்திப்பவர்கள்- இப்படி பூமி பல விதங்களில் பலருக்கு மாறி மாறி அமை வதை காண முடிகிறது.



சொந்த வீடு வாங்கியவர்களில் சிலர் கூட, அதை வாடகைக்கு விட்டு விட்டு வேறொரு வாடகை வீட்டில் குடியிருப்பதையும் காண் கிறோம். ஒவ்வொரு ஜோதிட நூல்களிலும் ஒவ்வொரு விதமாக இதைப்பற்றி வித்தியாச மாக விரிவாக சொல்லப்படுகிறது.

ஒருவரது ஜாதகத்தில் லக்ன கேந்திரத்திலி ருந்து சதுர்த்த கேந்திரமாகிய சுக ஸ்தானத் தில் சூரியன், செவ்வாய் கூடி இருந்து, செவ் வாய் அஸ்தமனம் அடைய இவர்களுக்கு சப் தம ஸ்தானத்தில் சந்திரன் பலமாக இருக்க, அந்த ஜாதகர் நவீனமான எல்லா சௌகரி யங்களுடன் கூடிய வீட்டை பெறுவர்.

ஜனன ஜாதகத்தில் நான்காம் இடம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய ஐந் தாம் இடத்தில் அங்காரகன் இருக்க, அந்த ஜாதகர்கள், உபய லக்னத்தில் பிறந்திருந் தால் சொந்த வீட்டிற்காக அவரது மறை முகமான போராட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

சிம்ம லக்கினத்தில் பிறந்த ஒருவருக்கு லக்ன கேந்திரத்தில் செவ்வாய் இருந்து, அவர் விருச்சிக இராசியில் பிறந்திருந்து, அவர் பிறந்த மாதம் சித்திரை அல்லது வைகாசியாக இருந்தால் அந்த ஜாதகருக்கு ஏராளமான மரங்களுடன் கூடிய தனி வீடு அமையும்.

ஆறு, நாலுக்குடையவன் சேர்ந்தோ, ஒருவருக்கொருவர் பார்வையிட்டோ பரிவர்த் தனம் அடைந்து இருந்தால் அவர் கடன் பட்டு வீடு கட்டுவார். இதில் நாலாம் பாவாதிபதி செவ் வாய் பலம் குறைந்தால் வாங்கிய சொத்தை கடனுக்காக விற்கும் படி நேரும். ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் பலமடைந் தால் மறுபடியும் வீடு வாங்கும் யோகம் ஏற் படும்.

நாலாம் இடத்தில் ஒன்பதுக்கு உடைய

## ஜோதிடக் களம்

வன் சுக்ரனுடன் கூடியிருப்பது விசேடம். ஆனால், ஒன்பதாம் பாவாதிபதிக்கு 6, 8, 12 பாவாதிபதிகள் சம்பந்தம் கிடைத்தாலும் குரூர கிரகம் சம்பந்தம் கிடைத்தாலும் வீடு யோகம் சின்ன அளவிலேயே அமையும்.

நாலாம் பாவாதிபதி, லக்னாதிபதி பலம் பெற்று, சந்திரன் லக்னகேந்திரத்தில் இருந் தால் அந்த ஜாதகருக்கு யோக திசையில் விலை உயர்ந்த வாகனமும் அருமையான வீடும் அமையும்.

நான்கு, இரண்டு, பன்னிரண்டாம் இடத்து அதிபதிகள், 3,6,8,12 ஆம் இடத்தில் எத் தனை பாப கிரகங்களுடன் கூடியிருக்கிறார் களோ, அத்தனை வீடுகளை வாங்கி பின் விற்று விடுவார்கள்.

லக்னத்திற்கு கேந்திரத்திலும், திரிகோ ணத்திலும் பலம் பெற்ற கிரகங்கள் இருந்து, நல்ல திசை நடக்கும் போது, அந்த ஜாதகர் தன் சுயமுயற்சியால் பல வீடுகள் வாங் குவார்.

நான்கிற்குடையவன், பன்னிரண்டாம் இடத்தில் இருந்தால் பழைய வீட்டை வாங்கு வார்.

நான்காம் பாவாதிபதி கேந்திர திரிகோ ணத்தில் இருந்து சுபகிரகம் பார்வையிட, அத்தகைய ஜாதக அமைப்பு உடையவர் வித்தியாசமான முறையில் அழகிய வீடு கட் டுவார்.

நான்காம் பாவாதிபதி லக்ன கேந்திரம் ஏறி, பலம் பெற்று இருந்தால், 3 ஆவது வீட்டில் சுபகிரகம் அமையப் பெற்ற ஜாதகர் மதில் சுவற்றுடன் கூடிய பெரிய வீட்டை வாங்குவார்.

நான்காம் பாவாதிபதி இராசி, நவாம்சம் போன்றவற்றில் பலத்திருந்து , குரு, பூரண சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டால் கோவில் போன்ற தோற்றம் உடைய அழகிய வீடு அமையும்.

பொதுவாக பூமி யோகம் உள்ளவர்கள் வாஸ்து சாஸ்திரங்களில் சொல்லியபடி வீடு அமைத்துக் கொள்வது பூமி யோகத்தை அதிகப்படுத்தும்.

# சட்டவிரோத குடியேற்றவாசிகளை கட்டுப்படுத்தல் தொடர்பில் இலங்கை கடற்படை தீவிரம்

(கொழும்பு)

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளைக் கட் டுப்படுத்துவதில் இலங்கைக் கடற்படை அபார திறமையுடன் செயற்படுவதாக அவுஸ்திரே லிய அரசாங்கம் பாராட்டுத் தெரிவித் துள் ளது.

மீன்பிடி வள்ளங்கள் மூலம் இலங்கை யிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் சென்ற சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் மூலம் அவுஸ்திரேலிய அரசாங்கம் பெரும் தலையிடியை எதிர்கொண்டிருந்தது.

அவ்வாறான சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இலங்கைக் கடற்படையுடன் பேச்சுவார்த்தை கள் நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து கடற்படை ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

கடந்த 2009 ஆம் ஆண்டில் 180 சட்ட விரோத கடற்பயணிகளும் 2010 ஆம் ஆண்டு அதற்குக் குறையாத தொகையின ரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டி ருந்தனர். அவர்களில் சிங்களவர்கள், தமிழர் கள், முஸ்லிம்கள் அனைவரும் உள்ளடங்கி யிருந்தனர்.

பெரும்பாலும் தென்னிலங்கையின் கடற் பரப்பின் ஊடாகவே அவர்கள் அவுஸ்தி ரேலியா நோக்கிய பயணத்தை மேற்கொண்டி ருந்தனர். ஆயினும் கடற்படையினரின் கடு மையான ரோந்து நடவடிக்கைகள் காரண மாக அவுஸ்திரேலியாவுக்கான சட்ட விரோதக் குடியேற்றவாசிகளின் தொகை தற்போது கடும் வீழ்ச்சி கண்டுள்ளது.

அதன் காரணமாக அவுஸ்திரேலிய அர சாங்கம் விசேட பிரதிநிதியொருவரை அனுப்பி இலங்கைக் கடற்படைக்கும் பாராட்டுத் தெரி வித்துள்ளது. அதற்கு மேலதிகமாக அவுஸ்தி ரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போதும் அது குறித்த விசேடமாகப் பாராட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# அம்பாறை அதிரடிப்படை முகாம் 21 வருடங்களின் பின் வாபஸ்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை முகாம் 21 வருடங்களுக்கு பின் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையினர் இம்முகாமை விட்டு கடந்த 27 ஆம் திகதி புறப்பட்டுச் சென் றனர்.

இம்முகாம் தனியார் குடியிருப்புக்களில் அமைக்கப்பட்டு இருந்தது. இராணுவத்தினர் அவ்விடத்திலிருந்து வாபஸ் பெற்றதை யடுத்து குடியிருப்புக்களின் சொந்தக்காரர் கள் அப்பகுதியில் மீள்குடியேற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையின் மீன்பிடித்துறை குறித்து நோர்வே ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையின் மீன்பிடித்துறை குறித்து நோர்வே நாடு ஆர்வம் செலுத் தத் தொடங்கியுள்ளதுடன் இருதரப்பும் இணைந்து செயற்பாடுகள் குறித்தும் கலந்தாலோசித்துள்ளன.

இலங்கையின் மீன்பிடித்துறையில் நோர்வே இணைந்து செயற்படுவது குறித்து இரு தரப்புக் கலந்துரையாடல் மற்றும் கருத்துப் பரிமாறல்களுக் காக அண்மையில் நோர்வேயிலிருந்து ஐம்பது மீனவ தொழில் முயற்சியா ளர்கள் இலங்கைக்கு வந்து சென்றிருந்தனர்.

அதற்கான ஏற்பாட்டை இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஹைறல்ட் ஹெரஸ்டட் இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து ஏற்பாடு செய் திருந்தார்.

நோர்வே அரசாங்கம் கடந்த பதினேழு வருடங்களாக இலங்கையின் மீன் பிடித்துறைக்கு பாரிய ஒத்தாசையை வழங்கி வருகின்றது. எதிர்வரும் காலங் களில் இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை வளர்த்தெடுத் தபடி அதனை மென்மேலும் மேம்படுத்துவதே குறித்த கலந்துரையாடலின் நோக்கம் என்பதாக நோர்வே தூதவராலயம் அறிவித்துள்ளது.

ஆயினும் வடக்கின் மீன்பிடித்துறையில் ஆதிக்கம் செலுத்துவதன் மூலம் அங்குள்ள கனிய வளங்கள் மற்றும் இன்னோரன்ன வசதிகளை தமதாக் கிக்கொள்ளும் நோக்கிலேயே நோர்வே இந்த வழிமுறையைக் கைக்கொண் டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் மூலம் தகவல்கள் கசிகின்றன. (ஸ்ரீ-2)

*கிளிநொச்சி தென்னை பயிர்ச்செய்கை சபையி னால் தென்னை புனர மைப்பு மானியத்திட் டத்தின் கீழ் தென்னைச் செய்கையாளர்களுக்கு மானிய காசோலை வழங்கும் நிகழ்வு அண் மையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடை பெற்றது. இதில் தென்னை செய்கையாளர் ஒருவருக்கு மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மானிய காசோலை வழங்கு வதையும் அருகில் கிளி. மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோ கத்தர் ஜெ.சத்தியேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்காக காத்திருக்காதீர்கள்!

உண்மையைப் புரிந்துகொள்ள முதலடியை எங்கே வைப்பது?

நீங்கள் பக்கத்துத் தெருவுக்குப் போக விரும்பினாலும் சரி, நிலவுக்கே போக விரும்பினாலும் சரி...உங்கள் பயணத்தை எங்கே துவக்க முடியும்? இப்போது நீங்கள் இருக்கும் இடத்திலிருந்துதானே? அங்கிருந்து முதலடி, அதற்கப்புறமஅடுத்த அடி என்று தானே பயணப்பட முடியும்?



ஆன்மீகப் பயணத்திற்காக இருக்குமிடத்தை விட்டுஎழுந்து நிற்கும் போதே, சொர்க்கவாசலில் நின்றிருப்பதாக நீங்களாக நினைத்துக் கொண்டால், அது உங்களையே ஏமாற்றிக் கொள்ளும் கற்பனையாக இருக்க முடியுமே தவிர, உங்கள் பயணம் துவங்கவே துவங்காது.

உங்களுக்குத் தெரியாததைத் தெரியாது என்று தைரியமாக ஒப்புக் கொள்ளுங்கள். வேதாந்தங்கள் புரிந்துவிட்டதாக வீணாக கற்பனைகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள். எந்த எண்ணங்களை அணிய வேண்டும், எந்தக் குணங்களைக் கொண்டிருக்க வேண்டும், எந்த வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும், எந்த உயரத்தைத் தொடவேண்டும்... இப்படி உங்களுக்கான ஒவ்வொன்றையும் உங்கள் ஆசைதான் முடிவு செய்கின்றது.

எட்டிப் பிடித்துவிட்டால் வெற்றியைக் கொண்டாடுவீர்கள், முடியவில்லை யென்றால் வேதாந்தம் பேசுவீர்களா?

சங்கரன்பிள்ளை வேதாந்த வகுப்புகளுக்கு தொடர்ந்து போய்வந்தார்.

எல்லாமே மாயை. நீ என்றும், நான் என்றும்,அவன் என்றும் எந்த வித்தியாசமும் கிடையாது. எல்லாமே ஒன்றுதான். நீ தான் நான்... நான் தான் நீ! என்றெல்லாம் கேட்டுக் கேட்டு, தான் முற்றும் கற்றுத் தெளிந்துவிட்டதாக நினைத்தார் சங்கரன்பிள்ளை.

தெருவில் நடக்கும் போது, தன்னை ஒரு வேதாந்தியாக நினைத்து, தலையைச் சற்று தூக்கிவைத்தே நடந்தார்.

பசித்தது. சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றார். வேண்டியதை எல்லாம் வாங்கிச் சாப்பிட்டார். ஏப்பம் விட்டார்.

கல்லாவில் உட்கார்ந்திருந்தவரைப் பார்த்தார் 'அவன் தானே நான்... நான் தானே அவன்!' என்று பில்லைக் கொடுக்காமல் நடந்தார். அவரைத் துரத்திப் பிடித்தார்கள். நீதிமன்றம் கொண்டுபோய் நிறுத்தினார்கள்.

'ஐயா நீதிபதியே! எல்லாமே நான். எதுவுமே நான் இல்லை. நீங்களும் என்னுடன் வேதாந்த வகுப்புகளுக்கு வந்திருந்தால் இதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இந்த வழக்கே வந்திருக்காது. நான் சாப்பிட்டதற்கு எனக்கு நானே எதற்குக் காசு கொடுக்க வேண்டும்?'

சங்கரன்பிள்ளை இந்த வழக்கைக் குழப்பப் பார்ப்பதாகச் சொல்லி, 'இந்த ஆளுக்கு பத்துக் கசையடி கொடுங்கள்' என்று உத்தரவிட்டார் நீதிபதி.

கசையடி விழ ஆரம்பித்ததும், சங்கரன்பிள்ளை வலியில் துள்ளினார். 'உங்களுக்கு வேதாந்தமே புரியவில்லை. செய்யாத தவறுக்காக என்னை ஏன் அடிக்கிறீர்கள்?' என்று புலம்பினார்.

'உங்களை யார் அடித்தார்கள்? கசையடி கொடுப்பவன் வேறு, நீங்கள் வேறு அல்லவே? அவன் தன்னைத் தானே அடித்துக் கொள்கிறான்!' என்றார் நீதிபதி.

'இல்லை,நான் வேதாந்தி இல்லை. சாப்பிட்டதற்கு காசு கொடுத்து விடுகிறேன். கசையடிகளை நிறுத்துங்கள்' என்று மண்டியிட்டார், சங்கரன் பிள்ளை.


இப்படித்தான் மனதைத் தெளிவாக வைத்துக் கொள்ளத் தெரியாதவர்கள் தங்களின் நினைவாற்றல், சிந்தனை, கற்பனை, கவனம், உறக்கம், வக்கிரம், படித்தது, புரிந்தது, புரியாதது என்று மனத்தின் வெவ்வேறு அடுக்குகளை எல்லாம் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள். இந்த பூமியில் கடவுள் ஒன்பது முறை அவதரித்ததாகச் சொல்கிறோம்.

ஆனால், உங்களைச் சுற்றிக் கவனியுங்கள். அவர் வருகைகளால் ஏதாவது உபயோகமான மாற்றங்கள் நிகழ்ந்திக்கின்றனவா?

யார் வந்தாலும்,போனாலும் நீங்கள் வளரத் தயாராக இல்லாதவரை உங்கள் வாழ்க்கையை யாராலும் மாற்ற முடியாது.

மகான்களின் வருகைகளால் மட்டும் முழுமைய ான விழிப்பு உணர்வைக் கொண்டு வர முடியாது. நீங்களாக மாற விரும்பினால் மட்டுமே மாற முடியும்.

உங்கள் வாழ்க்கையை நீங்களாக வாழக் கற்றுக் கொள்ளா விட்டால், பத்தாவது முறை கடவுள் வந்தாலும் அர்த்தமில்லை. பத்தாயிரம் முறை மகான்கள் வந்தாலும் புண்ணிய மில்லை



ஆன்மீகம் 32

கடவுளுக்காகக் காத்திருக் காதீர்கள். யாரோ சொன்ன வேதாந் தங்களை அப்படியே ஏற்காதீர்கள்.

மகான்களைப் பற்றிய புத்தகங்களாக இருந்தால் கூட, அவற்றை உந்து சக்தியாக மட்டும் பயன்படுத்துங்கள். அவற்றையே உங்கள் படிப்பினையாக நினைத்து ஓய்ந்து விடாதீர்கள்.

தேவையின்றிச் சேர்ந்திருக்கும் குப்பைகளை விலக்கினால்தான், அங்கே பொக்கிஷங்களை நிரப்ப முடியும்.

தெரியாது என்று ஒப்புக் கொள்ளும் போதுதான், அகங்காரம் விலகி, தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெற முடியும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலக்கிய வடிவங்களும் நிரப்பப்படாத இடைவெளிகளும்

03



கலைக்குள்ளே மட்டும் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் என்ற முன்மொழிவுக்கலை வழியாக முன்னெடுக்கப்பட வேண்டிய உயரிய கருத்தியல் தரிசனத்தை முடக்கி விடுகிறது. கலையாக்க முயற்சியில் கருத்துத் தரிசனத்தை கைவிடலும் இலக்கியமாக்கப்படலை பாதிப்படையச் செய்துவிடும். கலைப்பண்பைச் சிதறடிக்காத உயர்ந்த கருத்தியல் சாரா இலக்கியங்கள் வெற்றொலிப்புக் களாகின்றன.

இலக்கியம் என்பது கலை, ஆனால் அதை ஆக்குதல் என்பது ஒரு "நுண் வினை (CRAFT), ஒவ்வொரு இலக்கிய வடிவமும் அவற்றிற்குரிய நுண் வினையை உள்ளடக்கியுள்ளது. ஆரம்ப காலங்களிலே அந்த நுண்வினைச் செயல்கள் செய்யுளுக்கும், நாடக ஆக்கத்துக்கும் உரியவையாகக் கொள்ளப்பட்டன. நாடக வளர்ச்சியில் கதையை வளர்த்துச் செல்வதற்கு முரண்விசை அல்லது முரண்பாத்திரத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்திலே முன்னரே தீர்மானிக்கப்பட்ட அமைப்பு (PREDETERMINED STRUCTURE), பற்றிய பிரச்சினை மேலெழுந்தது. எடுத்துக்காட்டாக உற்றெழும் கவிதை அனுபவத்தை ஏற்கனவே வரையப் பட்ட யாப்புக் கட்டமைப்புக்குள் முடக்கி விடுவதா? அல்லது உடைத்து மீறிச் செல்வதா? என்ற பிரச்சினை எழுந்தது. அவ்வாறான மீறலே ஐரோப்பிய இலக்கிய வரலாற்றிலே "ரொமாண்டிசம்" என்ற கற்பனை உற்றெழலியலைத் தோற்றுவித்தது. இவ்வாதம் வடிவமில்லாமையின் (FORMLESSNESS), மகிழ்நிலை ஆரவாரத்தைத் தூண்டியது. வில்லியம்பிளேக் மற்றும் வால்ட்விக்மன் ஆகியோர் தமக்கேயுரிய வடிவங்களை ஆக்கிக் கொண்டனர். தமிழ் மரபில் எழுத்து இதழில் இருந்து இது உணர்வுபூர்வமாக மேலெழுந்தது.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

சமூகவளர்ச்சியின் போது சமூக அடுக்கமைவின் அடிமட்டங்களுக்குரிய இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்களாகின. அவற்றிலிருந்து வளர்ச்சி கண்டு மாறுபட்டு நிற்பவை "எழுகுழாத்து" (ELITE) இலக்கியங்களாகும். நிலமானிய சமூகத்தில் நாட்டார் இலக்கியங்களே வெகுசன (POPULAR) இலக்கியங்களாக இருந்தன. அவை சமூகத்தின் அடிநிலை மக்களிடத்திருந்து முகிழ்த்தெழுந்தன. ஆனால் தற்போது வெகுசன இலக்கியத்தை எழுகுழாத்தினரே உருவாக்கிப் பரவவிடுகின்றனர். வெகுசன கலை இலக்கியங்களை ஆழ்ந்து ஊடுருவி நோக்கும் பொழுது சமூகத்தளமும் தனிமனித இருப்புமே மீள்பரிசீலனைகளை நோக்கி மேலெழுகின்றன.

இலக்கிய ஆக்கம் ஒரு உற்பத்திப் பொருளாக மட்டுமன்றி இலாப மீட்டும் பண்டமாகவும் (COMMOD-ITY) பின்னைய முதலாளிய வளர்சியிலே எழுச்சி கொண்டு வருகின்றது.

கோளமயமாக்கலும் சமகாலத்தில் நிகழ்ந்துவரும் எண்ம (DIGITA)ப் புரட்சியும் இலக்கிய உற்பத்தியில் மேலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருகின்றன. கோளமய மாக்க லிலும் எண்மப் புரட்சியிலும் பெரும் முதலாளியம் பின்னணியில் இருப்பதைத் திரிபு படுத்திக் காட்டும் இலக்கிய ஆக்கங்களும் சிறந்த திறனாய்வு முயற்சிகளும் மேலோங்கி வருதலை மனங்கொள்ள வேண்டியுள்ளது.

**பேராசிரியர். சபா.ஜெயராசா**

ஒற்றைப் பரிமாண அழகியலையும் பொழுதுபோக்குச் சுவையையும் வலியுறுத்தும் திறனாய்வாளர் அவற்றின் உள்ளீடான கருத்தியற் பின்னணியைக் குறிப்பிடத்தவறி விடுகின்றனர். அந்நிலையில் இலக்கியக் கருத்தியலைப் பிரித்தறியும் தேவை விரைந்து மேலெழுகின்றது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியாவின் முக்கிய நகரங்கள் எதிர்ப்பாளர்களின் வசமானது

## டிரிபோலியில் இறுதிக்கட்ட மோதல்

லிபியாவின் கிழக்குப் பகுதியை ஏற்கனவே கைப்பற்றிய கடாபி எதிர்ப்புப் புரட்சிப் படைகள் கடந்த 27 ஆம் திகதி முக்கிய நகரங்களான ஜாவியா மற்றும் மிஸ்ரட்டாவைக் கைப்பற்றி விட்டன. தொடர்ந்து தலைநகர் டிரிபோலியை நெருங்கிக் கொண்டிருக்கின்றன. டிரிபோலியில் எந்நேரமும் கடாபி ஆதரவு மற்றும் எதிர்ப்புப் படைகளுக்கு இடையில் இறுதிக்கட்ட மோதல் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

பெங்காசி, அல்பைடா, டெர்ணா உள்ளிட்ட நாட்டின் கிழக்குப் பகுதிகளை கடாபி எதிர்ப்பாளர்கள் இராணுவத்தின் துணை யுடன் கைப்பற்றினர். பெங்காசியில் முன்னாள் நீதித்துறை அமைச்சர் முஸ்தபா முகமது அப்த் அல்ஜலீல் தலைமையில் இடைக் கால அரசு உருவாக்கப்பட்டது. இதற்கிடையில் நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள முக்கிய நகரங்களான ஜாவியா மற்றும் மிஸ்ரட்டா வில் கடாபி இராணுவம் மற்றும் எதிர்ப்புப் படைகளுக்கு இடையில் மோதல் இடம்பெற்றது. இறுதியில் ஜாவியா நகரம் எதிர்ப்பாளர்கள் கைகளில் வீழ்ந்தது. ஜாவியா நகரைச் சுற்றியுள்ள ரிபாத், சுபா, ஜபோ, ரோக்பன் , ஜென் டன் உள்ளிட்ட பல்வேறு சிறு நகரங்களையும் எதிர்ப்பாளர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

எனினும் ஜாவியா நகரின் வெளிப் பகுதியில் 2 ஆயிரம் இராணுவ வீரர்கள், எதிர்ப் பாளர்களைத் தாக்கத் தயார் நிலையில் உள்ளனர். மிஸ்ரட்டாவின் பெரும் பகுதியையும் எதிர்ப்பாளர்கள் கைப்பற்றி விட்டனர். டிரிபோலிக்கு வெளியே 28 கிலோமீற்றர் தூரத்தில் தற்போது எதிர்ப்பாளர்கள் நிலை கொண்டுள்ளனர். அந்நகரில் உள்ள அரசு வானொலி கட்டடம் மீது குண்டு வீசித்தாக்கிய விமானம் ஒன்றை எதிர்ப்பாளர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி தாக்கினர். இதனால் அந்த விமானம் வேறுவழியின்றித் தரையில் இறங்கியது. அதில் இருந்தவர்களை எதிர்ப்பாளர்கள் சிறை பிடித்தனர்.



**டிரிபோலியில் அச்சம்**

பெங்காசியில் உள்ள இராணுவ பிரிவின் தலைவர் கேணல் ரமாதான் டிரிபோலியை நெருங்கிச் செல்லும் எதிர்ப்பாளர்களுக்கு உதவத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். இதனால் டிரிபோலியில் எந்நேரமும் பயங்கர மோதல் வெடிக்கலாம். டிரிபோலியின் புறநகர்ப்பகுதியான டஜோராவில் கடாபி ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இப்பகுதியின் சில பகுதிகளில் பொதுமக்கள் தடுப்புகளை இராணுவவீரர்கள் மீது தூக்கி எறிந்தனர். சிலர் இராணுவப் படைத் தளங்களை சூறை யாடி ஆயுதங்களை கைப் பற்றினர்.

**கடாபியை நீக்க ஆலோசனை**

இந்நிலையில் சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் இடம்பெற்று வரும் ஐ.நா மனித உரிமை அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கடாபியை உடனடியாக லிபியாவில் இருந்து வெளியேற்றுவது குறித்து பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு நாட்டு வெளியுறவு அமைச்சர்களு டன் ஆலோசனை நடத்தினார். இதற்கிடை யில் லிபியா மீது ஆயுதப்பரிமாற்றம், சொத்து முடக்கம் உள்ளிட்ட பல்வேறு பொருளாதாரத் தடைகளை ஐரோப்பிய யூனியனும் நேற்று முன்தினம் விதித்தது. லிபியாவின் மிக நெருங்கிய நட்பு நாடான இத்தாலி, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வலியுறுத்தியுள்ளன. (ஸ்ரீ-2)

# பொலிவியா நாட்டில் நிலச்சரிவு; 400 வீடுகள் மண்ணில் புதைந்தன

(பொலிவியா)

தென்அமெரிக்காவில் உள்ள பொலிவியா நாட்டில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆறாக ஓடுகிறது. ஆறுகளில் தண்ணீர் கரை புரண்டு ஓடுகிறது. விளை நிலங்களில் தண்ணீர் புகுந்துள்ளது. வீதிகள் சேதமடைந்துள்ளன. இந்த மழைக்கு மலை பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் லா பாஷில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் சுமார் 400 வீடுகள் மண்ணில் புதைந்துள்ளன. இதனால் பலர் சேற்றுக்குள் சிக்கியுள்ளனர். தகவல் அறிந்ததும் மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றுள்ளனர். மண்ணுக்குள் புதைந்து இருப்பவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. நிலச்சரிவில் சிக்கி பலியானவர்களின் விபரம் இதுவரை வெளியிடப்படவில்லையெனவும் ஆனால் லாபாஷ் நகரில் இதுபோன்ற கடுமையான நிலச்சரிவு இதுவரை ஏற்பட்டதில்லை என ஆளுநரின் செய்தி தொடர்பாளர் எட்வின் ஹெரேரா தெரிவித்துள்ளார். இம்மழை காரணமாக இதுவரையிலும் 44 பேர் உயிரிழந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ)

# பஹ்ரைன் அரசருக்கு பராக் ஒபாமா ஆதரவு

நாட்டில் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடிவு செய்துள்ள பஹ்ரைன் அரசருக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா ஆதரவு தெரி வித்துள்ளார். சிறிய அரபு நாடான பஹ்ரைன் அரசருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டனர். இதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் வேகம் அதிகரித்ததே தவிர குறையவில்லை.

இதையடுத்து வழிக்கு வந்த பஹ்ரைன் மன்னர் ஹமாத்பின்ஷா அல்-கலிஃபா நாட்டில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் அமைச்சரவையை மாற்றி அமைக்கவும் ஒப்புக் கொண்டனர்.

மன்னரின் இந்த முடிவை பராக் ஒபாமா வரவேற்றுள்ளார். இது தொடர்பாக அவர் வோஷிங்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மக்களின் விருப்பங்களை பரிசீலித்து சீர்திருத்தங்களை மேற்கொள்ள பஹ்ரைன் அரசர் முன் வந்துள்ளது வரவேற்கத்தக்கது. மக்கள் பிரதிநிதிகளுடன் அரசர் நடத்தும் பேச்சுக்கள் அர்த்தமுள்ளதாகவும் ஆக்கபூர்வ மானதாகவும் இருக்க வேண்டும்.

நாட்டில் குழப்பம் ஏற்பட்டு ஸ்திரத் தன்மை பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்று ஒபாமா கூறியுள்ளார்.

பஹ்ரைனில் கிளர்ச்சி ஏற்பட்டதை அடுத்து நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட எதிர்க்கட்சி தலைவர்கள் நாடு திரும்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பஹ்ரைன் எண்ணெய் வளமிக்கநாடு. அங்கு ஷியா பிரிவு முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். ஆனால் அரசர் சன்னி பிரிவைச் சேர்ந்தவர் என்றார். (ஸ்ரீ-2)



83 ஆவது ஒஸ்கார் விருதுகள் வழங்கும் விழா அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்றது. இதில் சிறந்த அனிமேசன் படத்திற்கான விருது "தி டாய் ஸ்டோரி-3" எனும் படத்திற்கு வழங்கப்பட்டது. இப் படத்தின் இயக்குநர் லீ ஒங்கிரிச் விருதுபெற்ற [illegible] பதைப் படத்தில் காணலாம்.




# எதிர்க்கட்சித் தலைவர் எங்கே? ஈரானில் பெரும் பரபரப்பு




வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஈரான் எதிர்க்கட்சித் தலைவர் மெஹ்திகரொப்பியை இராணுவத்தினர் வேறு இடத்திற்கு மாற்றியுள்ளனர்.

அவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது எவருக்கும் தெரியவில்லை. இதனால் ஈரானில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

எகிப்து, பஹ்ரைன், ஓமான் ஆகிய நாடுகளில் பற்றிய மக்கள் புரட்சி எனும் தீ ஈரானையும் விட்டு வைக்கவில்லை. அங்கு ஜனாதிபதி மெஹ்மூத் அகமது நிஜாதிக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

புரட்சியை அடக்க புறப்பட்ட இராணுவத்தினர் முதல் எதிர்க்கட்சித் தலைவர்களை குறி வைத்தனர். முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான மெஹ்திகரெமி, மீர் உசைன் மூசாவி இவர்களது மனைவி, குடும்பத்தினர் ஆகியோர் கடந்த சில நாட்களாக தெஹ்ரானில் உள்ள அவர்களது வீடுகளில் சிறை வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் இப்போது எங்கு இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களின் வீட்டுக்கு அருகே வசிப்பவர்கள் கூறுகையில்,

நள்ளிரவு நேரத்தில் இராணுவ வாகனங்கள் வருவதும் போவதுமாக இருந்தன. மெஹ்திகரெமியும் அவரது மனைவியும் நள்ளிரவு நேரத்தில் வீட்டில் இருந்து வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

[illegible] அவர்கள் இதுவரை வீட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை என்று கூறினர். வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதிலிருந்தே தலைவர்களின் தகவல் தொடர்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டது. ஈரான் எதிர்க்கட்சித் தலைவர்களின் இணையத்தளத்தில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.


எதிர்க்கட்சித் தலைவர்கள் கடைசியாக பேசிய வீடியோவில் மக்கள் போராட்டத்தைத் தொடர வேண்டுமென்று அழைப்பு விடுத்தது டன் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளில் இருந்து மீண்டு வருவோம் என்றும் கூறியிருந்தனர்.

முன்னதாக கடந்த 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஈரான் ஜனாதிபதியாக இருந்த மெஹ்மூக் அகமதி நிஜாத் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். தேர்தலில் அவர் முறைகேடு செய்து வெற்றி பெற்றதாக அப்போதிருந்த எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டி வந்தனர்.

இப்போது மக்களே அரசுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டதை அடுத்து அவர்களும் மக்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அகமதி நிஜாத் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய அதிபரின் குடும்ப ஆட்சி ஆதிக்கத்திற்கு எதிரான பொதுமக்கள் புரட்சி உச்சமடைகிறது



**நேட்டோ தலையீட்டை நாம் கண்டிக்கவேண்டும், லிபிய மக்களும் கடாபியும் தமக்குள் இணக்கம் காணவேண்டும், தமக்கான பொறுப்புக்களை கடாபி தட்டிக்கழித்துவிட முடியாது என வலியுறுத்துகிறார் பிடல்கஸ்ரோ.**

இரண்டாவதாக, சோவியத் யூனியன் வீழ்ச்சியின் படிப்பினைகளை - தமது நாட்டில் அரசியல் மற்றும் அமைப்பு சார்ந்த சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதில் மக்கள் திரளின் குரலுக்குச் செவிசாய்த்தல் - என்பதனை



யும் அவர், பிற மத்திய கிழக்கு - வட ஆபிரிக்க ஆட்சியாளர்கள் போலவே மறுத்து வந்திருக்கிறார்.

ஜேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அந்த நாட்டு பிரஜைகளின் படுகொலைகளுக்கு அவர் நேடியான காரணமாக இருந்திருக்கிறார். ஜேர்மனியில் நடனவிடுதிக் குண்டுவெடிப்பு, பிரித்தானியாவில் காவல்துறைப் பெண்மணியின் கொலை, அமெரிக்காவின் பேனம் விமானத்தை வெடிவைத்துத் தகர்த்தமை போன்றவற்றில் அவரது அரசு நேரடியாகச் சம்பந்தப்பட்டமை ஐயமற நிரூபிக்கப்பட்டதால் அவர் மீதான இராணுவ நெருக்கடியை மேற்குலகும் அமெரிக்காவும் வெளிப்படையாகத் திணித்தன.

குவைத்தின் மீது படையெடுத்த அவமானகரமான சதாம் குசைனின் காரியம் போன்றதாக இது ஆகியது. இதனது தொடர் விளைவாக, சதாம் குசைன் தூக்கிலிடப்பட்டதன்பின், தனது பாரிய அழிவு ஆயுதத்திட்டத்தை கடாபி கைவிட நேர்ந்தது. பேனம் விமான வெடிப்புப் பிரச்சினையில், அதில் மரணமுற்றவர்களுக்கு அவர் நஷ்டஈடு வழங்கவும் நேர்ந்தது. விளைவாக ரொனிப் பிளேயர், சார்க்கோஸி, பெர்லுஸ்கானி, ஹிலாரி கிளின்டன் போன்றோர் லிபியாவுக்கு விஜயம் செய்து கடாபியைச் சந்தித்தனர். பிரித்தானிய, பிரேஞ்சு, இத்தாலிய நிறுவனங்களுக்குத் தனது எண்ணெய் வளத்தைத் திறந்துவிட்டார் கடாபி.

பின்வந்த நாட்களில் உலகின் பயங்கரவாத எதிர்ப்பு யுத்தத்தில், அமெரிக்காவினதும் மேற்கத்திய நாடுகளதும் செல்லப்பிள்ளையாக கடாபி ஆகினார். அமெரிக்க-மேற்கத்தியப் பொருளாதார வட்டத்தினுள், அதிகார வட்டத்தினுள் இவ்வாறுதான் கடாபி வீழ்ந்தார்.

உள்நாட்டினுள் கடாபிக்கு எதிர்ப்புத் திரள்வதற்கான காரணம் என்ன? இந்த எதிர்ப்பின் பின்னணியில் இருக்கும் சக்திகள் யாவர்?


லிபியாவின் அறுபது இலட்சம் சனத்தொகையில் 15 இலட்சம் வரையிலானவர்கள் மாணவர்கள். சனத்தொகையில் 85 சதவீதமானவர்கள் கல்வியறிவு பெற்றவர்கள். அவர்களது விழிப்புநிலைக்கு உகந்ததாக லிபியாவின் அரசியல் அமைப்பு இல்லை. அரசியல் கட்சிகள் லிபியாவில் தடை செய்யப்பட்டுள்ளன. தொழிற்சங்க அமைப்பு இல்லை. வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை எவருக்கும் இல்லை. கடாபியின் அரசியல் தலைமை குறித்து விமர்சனம் செய்வதற்கோ அல்லது மாற்றுத் தலைமை குறித்துச் சிந்திப்பதற்கோ வாய்ப்பு இல்லை.

ஊடகங்கள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் தான் செயற்படுகின்றன. லிபியாவின் நான்கு இனக்குழுக்களுக்கு இடையிலான. முரண்பாடுகளை தனது தலைமையில் இருத்தலுக்காகப் பயன்படுத்துவதும், ஒருவரை பிறிதொருவருக்கு எதிராக நிறுத்தி மற்றவரை அழித்தொழிப்பதுமே கடாபியின் வழிமுறையாக இருந்து வந்திருக்கிறது. இராணுவத்திலும் கூட தனக்கு விசுவாசமானவர்களையே கடாபி முன்னிறுத்தி வந்துள்ளார்.



கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்க, மேற்கத்திய நாடுகளுடன் உறவை ஏற்படுத்திக்கொண்ட பின்னால், கடாபியின் ஏழு மகன்களும் ஒரு மகளும் வியாபார ஒப்பந்தங்களின் வழியில் மிகப்பெரும் சொத்துக்களை குவித்திருக்கிறார்கள். நாட்டின் எண்ணெய்வளத்தில் கால்பகுதி வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு உரிமையாக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காரணங்களினாலேயே இளைஞர்களின் பெரும்பகுதியினர் கடாபிக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபடுகிறார்கள். இனக்குழுத் தலைவர்கள் பென்காசி நகர் எழுச்சியை உடனடியாக அங்கீகரிக்க அவர்கள் கடந்த காலத்தில் எதிர்கொண்ட அடக்குமுறையே காரணமாக ஆகிறது. இதனோடு நாட்டின் ஜனத்தொகையில் $^{1}/_{3}$ பங்கு மக்கள் தொகையினர் வாழ்கிற திரிபோலியை அடுத்துப் பெரிய நகரான பென்காசியில் இராணுவத்தினர் பொதுமக்களோடு இணைந்து தமது அதிகாரத்தை அங்கு நிலைநாட்டி



யிருக்கிறார்கள்.

சீனா, இந்தியா, எகிப்து போன்றநாடுகளின் லிபியத் தூதர்கள். கடாபியை எதிர்த்து பதவி விலகியிருக்கிறார்கள். பெப்ரவரி 25ஆம் திகதி நிலவரங்களின் படி, லிபியாவின் பாதி மக்கள் தொகை வாழும்பிரதேசங்கள். கடாபியின் எதிரிகளான கிளர்ச்சியாளர்களிடம் வீழ்ந்திருக்கிறது. திரிபோலியில் மட்டுமே கடாபி தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்தியிருக்கிறார். தான் இழந்துவிட்ட நாட்டின் பாதிப்பகுதியை மீளவும் தன்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான இராணுவத் தாக்குதலை கடாபி தொடர்ந்து நிகழ்த்தி வருகிறார்.

அவரது தந்துரோபாயங்கள் அவரது குழப்பமான மனநிலைக்கு சான்றாக இருக்கின்றன. தனக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் - எகிப்து, துனீசியா போன்ற நாடுகளின் கிளர்ச்சியாளர்களினது சதிதான் காரணம் என ஒருபுறமும் மறுபுறம் அல்கைதா பயங்கரவாதிகள் தான் காரணம் எனவும் சொல்கிறார். இளைஞர்களுக்கு போதை மருந்து ஊற்றிக்கொடுத்து அவர்களை கலவரத்துக்குத் தூண்டுகிறார்கள் எனவும் கடாபி கூறிவருகிறார்.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட கூலிப்படையினரை தமது சொந்தமக்களை கொல்வதற்காக அவர் பாவிக்கிறார். 1969 புரட்சியின் நிரந்தரப் பாதுகாவலராக அதனது உரிமையாளராக தன்னைக் கருதிக் கொள்ளும் அவர் தான் நாட்டின் ஜனாதிபதி அல்ல, மாறாக புரட்சியின் தலைவன் என்பதன் பெயரால் அந்தப்புரட்சியை பாதுகாப்பது தனது கடமை எனச்சொல்கிறார். புரட்சியைப்பாதுகாப்பது என்னும் பெயரிலேயே புரட்சிக்குள் புரட்சியாக எழுந்திருக்கிற மக்கள் எழுச்சியை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து விடுவதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

மத்திய கிழக்கில், துனீசியாவில் மக்கள் திரள் எழுச்சி எனும் பெருநெருப்பு எழுந்தபோது, முபாராக், பென் அலி, கடாபி போன்றவர்கள் குறித்து உடனடியாக அமெரிக்க மேற்கத்திய அரசுகளால் ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியவில்லை. பிரித்தானிய முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் முபாராக் போனால் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் வந்துவிடுவார்கள், முபாராக் நமது நண்பர் என்றார். பிரெஞ்சு ஜனாதிபதி சார்க்கோசி பென் அலி போனால் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் வந்துவிடுவார்கள். பென் அலி எமது நண்பர் என்றார். இத்தாலியப் பிரதமர் பெர்லுஸ்கானி கடாபி போய் லிபியாவில் இஸ்லாமிய அடிப்படைவாத அரசு வருவதைத் தன்னால் கற்பனை செய்துபார்க்க முடியவில்லை என்றார். கடாபி தமது நண்பர் என்றார்.

வரலாறு இவர்களைத் தாண்டித் தான் பயணம் செய்கிறது. ஈராக்கிலும் துனீசியாவிலும் படையினர் தவிர்க்கவியலாது மக்கள் சார்பாக நின்றனர். லிபியாவில் படையினர் பிளவுபட்டிருக்கிறார்கள். எனவே உள்நாட்டு யுத்தமே சாத்தியமாக இருக்கிறது.

முபாராக்கையும், பென் அலியையும், கடாபியையும் தம்மால் காப்பாற்ற முடியாது எனும் சூழலில், மக்கள் எழுச்சியை அங்கீகரிக்க வேண்டிய நிலைக்கும் மத்திய கிழக்கில் தொடர்ந்தும் நலன்களைப் பேண வேண்டுமாயின் இது தவிர்க்க முடியாதது எனும் நிலைப்பாட்டுக்கும் அமெரிக்கர்களும் மேற்கத்தியர்களும் வந்தார்கள்.

தனது மக்களின் மீதே ஹெலிகாப்டர்களையும், குண்டுவீச்சு விமானங்களையும் பயன்படுத்துகிறார் கடாபி என்பதால், உலகநாடுகளின் விமர்சனங்களும் கடாபியின் மீது திரும்பியிருக்கிறது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை-இந்திய மீனவர் விவகாரம்

# புரிந்துணர்வை ஏற்படுத்த இருநாட்டு மீனவர்களையும் உள்ளடக்கிய செயற்குழு

மீனவர் விவகாரத்திற்குத் தீர்வொன்றை எட்டும் நோக்கில் இரு நாட்டு மீனவர்களையும் உள்ளடக்கிய இணைந்த செயற்குழுவொன்று அமைக்கப்படவிருப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் விவகாரம் குறித்து இரு நாடுகளும் இணைந்து பொதுவான இணக்கப்பாடொன்றுக்கு வரும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இரு தரப்பு மீனவர்கள் சார்பிலும் பிரதிநிதிகள் உள்வாங்கப்படுவார்கள் எனப் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

மீனவர் விவகாரத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவது தொடர்பில் இந்த இணைந்த செயற்குழு பேச்சுவார்த்தைகளை நடத்தும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழக மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் நிருபமா ராவ், தமிழகத்தின் பிரதம செயலாளர், இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவின் தமிழகப் பணிப்பாளர், இந்திய பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள் மற்றும் தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டமொன்று கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

இக்கூட்டத்திலேயே மீனவர்கள் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீனவர் விவகாரத்தில் பொது இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இணைந்த செயற்குழுவொன்றை நியமிக்கும் தீர்மானமும் இக்கூட்டத்தில் வரவேற்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ஶ்ரீ-2)

## மட்டக்களப்பில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 35 பேர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு பூணானை பகுதியில் தனியார் பயணிகள் பேருந்து விபத்துக்குள்ளானதில் 35 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 7 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக தெரியவருகிறது.

கண்டியிலிருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்ற பயணிகள் பேருந்து நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள 7 பேர் மட்டக்களப்பு வைத்தியசாலையிலும் மேலும் 8 பேர் வாழைச்சேனை வைத்தியசாலையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஶ்ரீ-2)

# உயிரியல் பல்வகைமை பற்றிய இரண்டாவது பயிற்சிப்பட்டறை

தாவர பிறப்புரிமை மூலவளங்கள் நிலைய உத்தியோகத்தர்களினால் சர்வதேச உயிர்ப் பல்வகைமைத் தன்மை ஆண்டு நிகழ்வின் 2ஆவது வேலைப்பட்டறை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப் படவுள்ளது.

பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் பல புதியவர்க்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செய்கை பண்ணப்பட்டு வருகின்ற அதேநேரத்தில் பல விவசாயிகள் தொண்டுதொட்டுசெயற் கைப் பண்ணப்பட்டு வருகின்ற பாரம்பரிய பயிர் இனங்களையும் கணிசமான அளவு செய்கைக்கு உட்படுத்தி வருகின்றன.

அறிமுகப்படுத்தப்படும் புதிய வர்க்கங்களானது உலகில் இருக்கக்கூடிய பாரம் பரிய பயிர் வர்க்கங்களில் உள்ள மரபணுக்களில் இருந்தே உற்பத்தி செய்யப்படுகின்றது.

ஏனெனில் நோய்,பீடைத்தாக்கம், கால நிலை மாற்றம் முதலியவற்றிற்கும் தாக்குப் பிடித்து வளரக்கூடியதாகவே புதிய வர்க்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அறிமுகப்படுத்தப் படுகின்றன. இதற்கு உதவும் முகமாக யாழ். மாவட்டத்தில் தொண்டுதொட்டு செயற்கைப் பண்ணப்பட்டு வருகின்ற பாரம்பரிய பழைய பயிர் இனங்கள் தொடர்ந்தும் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும் என்பதை வெளிப்படுத்தும் நோக்குடனேயே இவ் இரண்டாவது வேலைப்பட்டறையானது யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ்வேலைப்பட்டறைக்கு விவசாயப் பணிப்பாளர் நாயகம் கமால் மான்கோட்டே, உணவு விவசாய நிறுவனத்தின் பிரதிநிதி, தாவரப் பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத் தின் பிரதிப்பணிப்பாளர் பி.டபிள்யு. ரட்ணசிறி, ஆராய்ச்சி உத்தியோகத்தர் எஸ்.பார்த்தீபன், புதிய கண்டுபிடிப்பு அலகின் பொறுப்பதிகாரி லியனகே, மதிப்பீட்டு அலகின் பொறுப்பதிகாரி நளின், இழைய அபிவிருத்தி அலகின் பொறுப்பதிகாரி டாக்டர் ஹெட்டிப்பி ஆராய்ச்சி, மரபணு அலகு வங்கியின் பொறுப்பதிகாரி திருமதி பிரியந்தி பண்டார,தரவுகள் பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரி திருமதி சிறிமதி திஸா நாயக்க மற்றும் அந்நிலையத்தைச் சார்ந்த ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன்வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் விவசாயப்பணிப்பாளர் கே. சுப்பிரமணியம், வட மாகாண பிரதி விவசாயப்பணிப் பாளர் (விரிவாக்கம்) உத்தியோகத்தர்கள், விவசாயிகள் முதலானோர் விவ சாயத்திணைக்களத்தின் ஆராச்சிப் பிரிவி பொறுப்பதிகாரியும் உத்தியோகத்தர்களும், விவசாயத்திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப்பொருட்கள் பிரிவின் உதவிப் பணிப்பாளர்,விதை அத்தாட் சிப்படுத்தும் பிரிவின் பொறுப்பதிகாரியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீடத்தின் பீடாதிபதி டாக்டர் திருமதி சி.சிவச் சந்திரனும் ஏனைய துறைத் தலைவர்களும் விஞ்ஞானப்பீடத்தின் தாவரவியல் துறைத் தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் தென்னை அபிவிருத்திச் சபையின் பிராந்திய முகாமையாளர் ,பனை அபிவிருத்திச் சபை பொதுமுகாமையாளர்,யாழ். குடாநாடு விதை உற்பத்தி கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் இரண்டாவது வேலைப்பட்டறையில் உயிரியல் பல்வகைமையின் முக்கியத்துவம் பற்றி தாவரப்பிறப்புரிமை மூல வளங்கள் நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பி.டபிள்யூ. ரட்ணசிறி யாழ். மாவட்டத்தில் பயிர்களின் உயிரியல் பல்வகைமை பற்றி பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) திரு.சி.சிவகுமார், யாழ்.மாவட்டத்தில் உயிரியல் பல் வகைமையின் முக்கியத்துவம் பற்றி தாவரப்பிறப்புரிமை மூலவளங்கள் நிலையத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் எஸ்.பார்த்தீபன் உரையாற்றவுள்ளனர்.

உயிரியல் பல்வகைமை பற்றிய ஆர்வலர்கள் இவ் வேலைப்பட்டறையில் கலந்து கொள்ள விரும்பின் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) அலுவலகத்துடன் 021 2222175 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் விரிவாக்கம் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

## மெய்வல்லுநர் போட்டி

கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஶ்ரீ-9)

# குற்றவாளி மீண்டும் சுற்றவாளியென மன்றுரை செய்ய முடியாது

## கொழும்பு பிரதான நீதிமன்றம் தீர்ப்பு

தீர்ப்பு ஒன்றில் முன்னர் குற்றவாளி என நீதிமன்றத்தில் குற்றத்தை ஏற்றுக் கொண்டவர்கள் பின்னர் குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் கீழ் 183 (1) ஆம் பிரிவின் கீழ் தனது குற்றத்தை மீளப் பெற முடியாது என கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் சட்டத்தரணி கே.ஜீ. ஜோன் முன்வைத்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதவான் இத் தீர்ப்பை வழங்கினார்.

எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டு தாம் செலுத்த வேண்டிய பணத்தை மாதா மாதம் செலுத்திக் கொண்டு வந்து இடை நடுவில் தாம் குற்றவாளியல்ல என கூறியதையடுத்து இவ்வாதம் ஏற்பட்டது. கொழும்பு புறக்கோட்டை பொலிஸாரினால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதிருப்தியுற்ற கட்சிக்காரர்களின் சார்பில் சட்டத்தரணி கே.ஜீ.ஜோன் தோன்றினார். சட்டத்தரணி கே.ஜீ.ஜோன் தனது வாதத்தை முன்வைக்கையில், குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 183 (1) ஆம் பிரிவில் குற்றத்தை மீளப் பெறலாம் என்று கூறப்பட்டிருந்தாலும் அவ்வாறு மீளப் பெற வேண்டுமானால் எதிரிகள் தம்மை பொலிஸார் நிர்ப்பந்தத்தின் பேரில் அல்லது தகாத செல்வாக்கின் பேரின் தான் குற்றவாளி எனக் கூறினர் என்றும் இல்லையேல் தாம் சுற்றவாளி என்றே கூறியிருப்பர் என்பதை அவர்கள் நிருபிக்க வேண்டும்.

மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்களையும் உயர் நீதிமன்ற தீர்ப்புக்களையும் இதற்கு ஆதாரமாக சட்டத்தரணி காட்டினார்.

இவரது வாதத்தை அடுத்து பிரதம நீதவான் எதிரிகளின் கோரிக்கையை நிராகரித்து தொடர்ந்தும் அவர்கள் முன்னரைப் போல் மாதாமாதம் பணம் செலுத்த வேண்டும் என்றும் கட்டளையிட்டார். மீண்டும் இவ்வழக்கு எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. (ஶ்ரீ-2)



யா/ இடைக்காடு மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் , கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் வே. பாலசுப்பிரமணியம், அச்சுவேலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேணல் சிஜிரகுமார், பாடசாலை அதிபர் ஆகியோர் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினர் மங்கல விளக்கேற்றுவதையும் வெற்றியீட்டிய இல்லத்திற்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குமாறு அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் கோரிக்கை

(கொழும்பு)

உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குமாறு அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு போதுமானதாக இல்லை என விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

வீட்டு வாடகைக் கொடுப்பனவாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரில் வீடொன்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இந்தத் தொகை போதுமானதல்ல எனவும் இதனால் அரசாங்கமே தமக்கு வீடு ஒன்றை வழங்க வேண்டுமெனவும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும் நோக்கில் தாம் அதிக நாட்கள் கொழும்பில் தங்கியிருப்பதாகவும் கொழும்பில் தங்கியிருப்பதற்கு வீடு ஒன்று அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

பொது நிர்வாக அமைச்சிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபது அமைச்சர்களும் பதினைந்து பிரதி அமைச்சர்களும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சிறுவர்களுக்கான செயற்பாட்டுப் பூங்கா இறுதிநாள் நிகழ்வு

(கொழும்புத்துறை)

ஜெசாக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் சிறுவர்களிற்கான செயற்பாட்டு பூங்கா இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அத்தியடியில் உள்ள ஜெசாக் சிறுவர் பிரிவுக்கான அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யுனிசெப் சிறுவர் பிரிவு அதிகாரி சிறுவர்களுக்கான விசேட கருத்துரையை வழங்கவுள்ளார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 70 சிறுவர், சிறுமியர்களுக்கு ஜெசாக் நிறுவன இணைப்பாளர் என்.சுகிர்தராஜ் சான்றிதழ்களை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

# சிவராத்திரியையொட்டி இசைநாடக நிகழ்வு

அல்வாய் சாமணத்தறை ஆலடிப் பிள்ளையார் கோயிலில் இன்று நடைபெறும் மகா சிவராத்திரி விழாவில் கலாநிதி த.கலாமணியின் அண்ணாவியத்தில் இரு இசை நாடகங்கள் நடைபெறவுள்ளன.

இதில் அல்வாய் மனோகரா கானநாடக சபா தயாரித்து வழங்கும் *சதி சுலோசனா* எனும் இசைநாடகம் 9.30 மணிமுதல் 10.25 வரையும் யாழ்ப்பாண நாட்டார் வழக்கியற் கழகம் தயாரித்து வழங்கும் *வள்ளி திருமணம்* இரவு 10.30 முதல் 12.25 வரையும் நடைபெறும். ஸ்ரீ-9)

# Calling for Tender-Teaching Hospital,Jaffna

01.The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital,Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00 am on 12.03.2011 Tender form may be collected from Director,Teaching Hospital, Jaffna up to 05.03.2011 on payment on non refundable deposit of Rs1,000/-.

| No | Nature or Work | Non Refundable Deposit |
|---|---|---|
| 01 | Painting of Ward 30 | Rs.1,000 |
| 02 | Construction of Storage Facilities for Waste Managament | Rs.1,000 |

02.Tenders will be Opened immediately after closing at the office of the Director, Teaching Hospital,Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening Tenders.

03.Tender forms are issued only to the contractor who has valid registration in Grade "M9" and above in the field of Building Constructions and other Institute of Constrution Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association or Sri Lanka (NCCASL)

04.Sealed Tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital,Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital,Jaffna on or before 10.00am on 12.03.2011.

05.Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office,CECB,Jaffna.

06.For further details please contact Hospital Secretary,Teaching Hospital,Jaffna.

The Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital,
Jaffna.

(C/2570)

# கணனிக் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி தொழிற்பயிற்சி நிலையத்தில் கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பகுதிநேரக் கற்கை நெறியாக ஆரம்பிக்கப்படவுள்ள இக்கணனிப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில்புரியும் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியினை தொடர விரும்புபவர்களிற்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 1[illegible] மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது . (ஸ்ரீ-3-30)

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## குருநகர்/பாசையூர்/ நல்லூர் சந்தைக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2011

*மாநகர சபைக்கு சொந்தமான கீழ்வரும் இலக்கங்களைக் கொண்ட கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் யாழ். மாநகரசபையால் கோரப்படுகின்றன.*

*கேள்விப்படிவக்கட்டணம் - ரூபா. 400.00 (வற்வரி நீங்கலாக)*
*கேள்விப்பிணைப்பணம் - ரூபா 3000.00*
*கேள்விப்படிவம் விநியோகித்தல் - 03.03.2011-17.03.2011 மு.ப.10மணிவரை*
*கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்- 17.03.2011 நண்பகல் 12 மணிவரை*
*கேள்வி திறத்தல் - 17.03.2011 பி.ப.2.30 மணிக்கு*

*கேள்விப்படிவம் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதியை சமர்ப்பித்து, மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப்படிவத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

*பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறையிலிட்டு ஒட்டி அரக்கு முத்திரையிட்டு உறையின் மேற்பகுதியில் தாங்கள் தெரிவு செய்யும் கடையின் இலக்கத்தை குறித்து "**மாநகர சபை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்**" என்ற முகவரிக்கு அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.*

*தபால் மூலமான விண்ணப்பங்கள் 17.03.2011 நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.*

*சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ்.மாநகர சபைக்கே உரியது.*

*மேலதிக விபரங்கள் தேவைப்படின் மாநகரசபை நானாவித இறை வரிப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.*

| கடைகள் விபரம் | | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை (தலா ஒரு கடைக்கு) |
|---|---|---|
| **குருநகர் சந்தைக்கடைகள் (மேல்தளம்) (48)** | | |
| 25 தொடக்கம் 37 வரை | 13 கடைகள் | 25,000.00 |
| 39 தொடக்கம் 41 வரை | 03 கடைகள் | 25,000.00 |
| 43,48 | 02 கடைகள் | 25,000.00 |
| 51 தொடக்கம் 63 வரை | 13 கடைகள் | 25,000.00 |
| 65 தொடக்கம் 70 வரை | 06 கடைகள் | 25,000.00 |
| 72 தொடக்கம் 82 வரை | 11 கடைகள் | 25,000.00 |
| **குருநகர் சந்தைக்கடைகள் (கீழ்த்தளம் )(02)** | | |
| 22,23 | 02 கடைகள் | 50, 000.00 |
| **பாசையூர் சந்தைக்கடைகள் (01)** | | |
| 02 A | 01 கடை | 25,000.00 |
| **நல்லூர் சந்தைக்கடை (01)** | | |
| 15/04 | 01 கடை | 50,000.00 |

குறிப்பு:-

*தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 12% பெறுமதிசேர் வரியும் 03% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் சேர்த்து செலுத்தல் வேண்டும்.*

*கடைகள் யாவும் தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு விடப்படுகின்றது.*

*கடை ஒப்படைக்கப்பட்டு 03 மாதத்திற்குள் திறந்து வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். தவறுமிடத்து குறிப்பிட்ட கடைகளுக்கு மீள் கேள்வி கோரப்படும்.*

*திருமதி .யோகேஸ்வரி பற்குணராஜா*
*மாநகர முதல்வர்,*
*மாநகரசபை,யாழ்ப்பாணம்.*

*(சி/2571)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே
—பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சிவராத்திரியை முன்னிட்டு இன்று 115 முன்னாள் போராளிகள் விடுதலை

புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளில் 115பேர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இப் போராளிகள் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அவர்களின் உறவினர்களுடன் இணைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் இப் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அவர் நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

வவுனியா பூந்தோட்ட புனர்வாழ்வு நிலையத்தில் முன்பள்ளி ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களும் இந் நிகழ்வின் போது வழங்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஒற்றுமை, சமாதானம், புனர்வாழ்வு நிலைய அனுபவம் மற்றும் எதிர்காலம் போன்ற பல்வேறு தொனிப் பொருள்களில் புனர்வாழ்வு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளுக்கு இடையில் ஓவியப் போட்டி இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இப் போட்டியில் தெரிவு செய்யப்படும் ஓவியங்கள் கொழும்பு கலாபவனத்தில் இடம் பெறவுள்ள ஓவியக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் எனவும் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார். (ச-5)

## வடமராட்சிக் கடலோர வீதியை புனரமைக்கக் கோரிக்கை

வடமராட்சி கடலோர வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளது என்று அப்பகுதிப் பொதுமக்களும் மீனவர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

தொண்டைமானாற்றிலிருந்து பருத்தித் துறை முனைவரையுள்ள வீதி குன்றும் குழி யுமாகக் காணப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் மீனவர்கள் தமது மீன் வியாபார நடவடிக்கைக்காக அதிகாலை வேளை அவ்வீதியால் பயணிக்கும் போது பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டி உள்ளனர்.

அத்துடன் 751 இலக்கமுடைய தனியார் பேருந்து மற்றும் இலங்கைப் போக்குவரத்துப் பேருந்துகள் இவ்வீதியால் பயணிக்கும்போது பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

அத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் பயணிக்கும் இவ்வீதியை உரிய தரப்பினர் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்களும் பயணிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

## பயிற்சிப்பட்டறை

ஜெசாக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் இளையோருக்கான வியாபாரம் ஆரம்பித்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வலி.வடக்கு பிரதேச செயலக மண்டபத்திலும் மற்றும் உடுவில் பிரதேச மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. இப் பயிற்சிப் பட்டறையில் 60 இளைஞர்-யுவதிகளுக்கு கைத்தொழில் அதிகார சபை உத்தியோகத்தர்களால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-3-51)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



சர்வசமயப்பேரவை உலகத்திற்கு எதையாவது எடுத்துக் காட்டியுள்ளது என்றால் அது இதுதான்: புனிதம், தூய்மை, கருணை இவை உலகின் எந்த ஒரு பிரிவுடையதின் தனிச் சொத்து அல்ல என்பதையும் மிகச்சிறந்த ஒவ்வொரு சமயப் பிரிவும் பண்புள்ள ஆண்களையும் பெண்களையும் தோற்றுவித்து இருக்கிறது என்பதையும் நிரூபித்துள்ளது. இந்த சாட்சியங்களுக்கு முன்பு தம் மதம் மட்டும் தான் தனித்து வாழும், மற்ற மதங்கள் அழிந்துவிடும் என்று யாராவது கனவுகாண்பார்களானால் அவர்களைக் குறித்து நான் என் இதய ஆழத்திலிருந்து பச்சாதாபப்படுவதுடன் இனி ஒவ்வொரு மதத்தின் கொடியிலும் 'உதவி செய், 'சண்டை போடாதே', 'ஒன்றுபடுத்து, அழிக்காதே', 'சமரசமும் சாந்தமும் வேண்டும், வேறுபாடு வேண்டாம்,' என்று எழுதப்படும் என்று அவருக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## தமிழ் அரசியல்வாதிகள் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க வேண்டும்

தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்திருந்தோம். இருந்தும் பயன் எதுவும் இல்லை.

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் உருவானபோது மகிழ்ச்சி. அரசியல் விவகாரங்களில் எட்டப்பட வேண்டிய தீர்மானங்களை எடுப்பதற்கும் அதனை வலியுறுத்துவதற்கும் இந்த அரங்கம் நல்ல வாய்ப்பாக இருக்கும் என நம்பியவேளை உள்ளூராட்சி சபைத் தேர்தல் சூறாவளி தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தை பலவீனப்படுத்தி விட்டது.

இதனிடையே சில அரசியல்வாதிகளுக்கு உள்ளூர தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தில் பிடிப்பில்லை.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் அறிவிப்போடு அரங்கத்தை விரும்பாதவர்கள் எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றி அரங்கத்தை உடைக்க மகாயாகம் செய்தனர்.

இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்கவும் இல்லை. அரங்கம் கூடவும் இல்லை.

என்ன செய்வது எங்களிடம் இருக்கக் கூடிய சுயநலம், நானே பெரியவன், என்னால் தான் முடியும் என்ற அகந்தை. என்னை யாரும் விஞ்ச முடியாது, விஞ்ச விடவும் முடியாது என்ற கர்வம். இவையெல்லாம் சேர்ந்து தமிழினத்தை படுகுழிக்குள் தள்ளிவிட்டன.

இதிலிருந்து மீளவேண்டுமாயின் தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்படவேண்டும்.

இந்த ஒற்றுமை இனப்பிரச்சினைக்கான தீர்வை அடையாளப்படுத்துவதற்கு—திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுப்பதற்கு—மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்துவதற்கு—தமிழர் பகுதிகளில் முதன்மைப்படுத்த வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை இனம் காண்பதற்கு என்ற வகையில் உருவாக்கப்படலாம்.

எதுவாயினும் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நின்று எதனையும் சாதிக்க முடியாதென்பது சர்வநிச்சயம்.

எனவே எங்களிடம் இப்போது எந்தப் பலமும் கிடையாது. எல்லாம் இழந்த கையறு நிலையில் ஒற்றுமையைத் தவிர வேறு எதுவுமே தமிழர்களுக்கு பலமாக இருக்க முடியாது.

ஆக, தமிழ்க்கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டால், அதற்கு தடையாக இருக்கும் காரணியை கண்டறிந்து அதனை இல்லாதொழிப்பதே ஒரேவழி.

அவ்வகையில் கர்வம், ஆணவம், அகந்தை இவையே எங்கள் ஒற்றுமைக்கு தடையாக உள்ளன.

இந்தக் கர்வம் அகற்றப்பட வேண்டும். அதற்காக தமிழ் அரசியல்வாதிகள் இன்றைய சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது அவசியம். விரதத்தை அனுஷ்டிக்காவிட்டாலும் விரதத்தின் உட் பொருளை உணர்ந்தாலே அது போதும். ஆணவம் கொண்ட பிரமாவும், கிருஷ்ணபரமாத்மாவும் தங்களுக்குள் ஏற்பட்ட கர்வத்தால் இறைபரம்பொருளை காணமுடியாமல் போகின்றதல்லவா! அதுபோலத்தான் எங்கள் கர்வம் எங்களுக்கான உரிமைகளை அடைய தடை செய்கின்றது.

எனவே சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்து கர்வம் போக்கி ஒற்றுமைப்படுவோம் பிளீஸ்.

# இறைவழிபாட்டிலும் விழிப்புணர்வு அவசியம் என்பதை உணர்த்தும் மகாசிவராத்திரி வழிபாடு



மாசிமாதத்தில் வரும் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி நாளாகிய அமாவாசைக்கு முன்தினம் மகா சிவராத்திரி நன்நாளாகும். அன்றிரவு நள்ளிரவு மூன்றே முக்கால் நாழிகை இலிங்கோற்பவகாலம் எனச் மிகச் சிறப்பாகவும் சிவராத்திரி விரதத்தின் மிக முக்கிய வழிபாட்டு நேரமாகவும் கொண்டாடப் படுகிறது.

சிவராத்திரி ஐந்து வகைப் படும். மாதந்தோறும் வரும் கிருஷ்ண பட்ச, சுக்கில பட்ச, சதுர்த்தசி தினங்களில் வருவது நித்திய சிவராத்திரி எனப்படும். தை மாதத்தில் கிருஷ்ண பட்ச சதுர்த்தசியில் வருவது பட்ச சிவராத்திரி எனப்படும்.

மாதந்தோறும் இப்படி வருவது மாத சிவராத்திரி எனப்படும். இது மாசி கிருஷ்ண பட்ச சதுர்த்தசி, பங்குனித் திருதிகை சித்திரை கிருஷ்ணபட்ச அட்டமி, வைகாசி அட்டமி, ஆனி சுக்கில பட்சசதுர்த்தி, ஆடி கிருஷ்ண பட்ச பஞ்சமி, ஆவணி சுக்கில பட்ச அட்டமி, புரட்டாதி திரயோதசி, ஐப்பசி சுக்கில பட்ச துவாதசி, கார்த்திகை தசமிபின் அட்டமி, மார்கழி இரு பட்சங்களிலும் வரும் சதுர்த்தசி, தை சுக்கிலபட்ச திருதிகை ஆகியனவாகும்.

சோமவாரத்தில் பகல், இரவு இருபோதும் அமாவாசை இருந்தால் அது லோக சிவராத்திரி எனப்படும். ஆண்டுதோறும் மாசிமாத கிருஷ்ண பட்ச சிவராத்திரியே மகா சிவராத்திரி எனப்படும்.

பார்வதி அம்மையானவர் எம்பெருமானிடம் உங்களுக்குப் பிடித்தமான விசேடபூசை எது எனக் கேட்ட போது எம்பெருமான் மாசி மகாசிவராத்திரி நாளே நமக்குப் பிடித்தமான விரத நன்நாள் எனக் கூறியதாகப் புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன. எம்பெருமானைப் போற்றும் சிறப்புமிக்க சிவராத் திரி திருநாட்களைப் பற்றிய புராண வரலாறுகளில்- ஒருகாலத்தில் வேடுவன் ஒருவன் காட்டிற் புலியின் ஆபத்தைத் தவிர்ப்பதற்காக அங்கு நின்ற வில்வமரம் ஒன்றில் ஏறியிருந்து, தனது நித்திரையைத் தவிர்ப்பதற்காக அதிலிருந்த இலைகளைப் பறித்து மரத்தடியிலிருந்த இலிங்கத்திற்குப் போட்டுக் கொண்டிருந்தான். விடியும் வேளை புலி சென்றதும் மரத்தினடியில் இறங்கிப் பார்த்தபோது அங்கு வில்வமிலைகள் சிவலிங்கத்தில் நிறைந்திருப்பது கண்டு அந்த இரவு சிவராத்திரி தினம் என்பதனையும் உணர்ந்து எம்பெருமானை வழிபட்டு நற்பேறு பெற்றான் என்பது ஒரு வரலாறு.

மற்றயது ஒருசமயம், தாம் தாமே பெரியவர் என்று பிரமா, விஷ்ணு போட்டி போட்டுக்கொண்ட போது இருவரது நடுவிலும் எம்பெருமான் ஒளிச்சுடராக தோன்றி அதன் அடியையும் முடியையும் காண்பவரே பெரியவர் என அசரீரியாகக்கூறவும் சோதிவ டிவின் அடிமுடிகளைக் காணப்புறப் பட்ட பிரமா, விஷ்ணு இருவரும் தம்மால் முடியாது எனக்கூறி எம்பெருமானைச் சரணடைந்தனர் என்பதாகும்.

### நீர்வைமணி

இறைவன் சோதிவடிவாகத் தோன்றிய இந்நாளையே மகா சிவராத்திரி வழிபாடாக உலகெல்லாம் போற்றி இரவு முழுவதும் விழித்திருந்து நான்கு சாமப் பூசை வழிபாடுகள் செய்து விரதம் அனுஷ்டித்து வருகின்றனர்.

எக்காரியத்திலும் உறுதியுடனும் விழிப்புடனும் செயற்பட்டாலே வெற்றியடையலாம் எனும் வாழ்க்கைத் தத்துவத்தை எல்லோருக்கும் நன்கு உணர்த்துவதான மகா சிவராத்திரி வழிபாட்டில் நாமும் மனத்தூய்மையுடனும் விழிப்புடனும் இறைவனை வேண்டுதல் செய்து நற்கதி அடைவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## கருத்துக்களம்

### எந்த அணியையும் வீழ்த்துவோம்

#### மேற்கிந்தியத் தீவுகள் வீரர் ரோச்,



நான் 'ஹட்ரிக்' படைத்ததற்கு டயான் பிரவோ தான் முக்கிய காரணம். அவர் அளித்த ஊக்கத்தால் தான் சிறப்பாகப் பந்து வீசினேன்.

முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியடைந்திருந்தாலும் இனி வரும் போட்டிகளில் இப்படி நடக்கும் என எதிர்பார்க்கவில்லை. பங்களாதேஷ் அணியை விட நாங்கள் சிறந்த அணிதான். எனவே அடுத்த போட்டியல் பங்களாதேஷ் அணியை வீழ்த்துவோம்.

ஏற்கனவே இரண்டுமுறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளோம். இந்த உலகக் கிண்ணத் தொடரிலும் சாதனை படைப்போம்.

அனைத்துப் பந்து வீச்சாளர்களை விடவும் வேகமாகப் பந் து வீசவேண்டுமென்பது எனது இலட்சியம். அந்த சாதனையை நிச்சயம் நிகழ்த்துவேன்.

இவ்வாறு நெதர்லாந்து அணிக்கெதிரான ஆட்டத்தில் 'ஹட்ரிக்' விக்கெட் சாதனை படைத்த மேற்கிந்தியத் தீவுகள் வேகப்பந்து வீச்சாளர் கீமர் ரோச் தெரிவித்தார்.

### சிறப்பான வெற்றி

#### மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர் சமி



டயான் பிரவோ காயமடைந்ததையடுத்து அணி வீரர்கள் கூட்டமாக ஆலோசனை நடத்தினோம். இதில் டயான் பிரவோவும் பங்கேற்றார்.

அப்போது அவர் முகத்தில் ஒரு வித வருத்தத்தை அனைவரும் கண்டோம். அதுதான் நாங்கள் உத்வேகமாக செயல்படுவதற்கு காரணமாக அமைந்தது.

ரோச் அருமையாக பந்து வீசினார். மிகவும் சிறப்பாக ஆடி வெற்றி பெற்றுள்ளோம். அடுத்த ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை வீழத்துவோம் என மேற்கிந்தியத்தீவுகள் அணித்தலைவர் சமி தெரிவித்தார்.

### இந்தியா–இங்கிலாந்து ஆட்டம் இங்கிலாந்து பத்திரிகைகள் கருத்து

பெங்களூரில் நடந்த இந்தியா-இங்கிலாந்து ஆட்டம் சமனிலையில் முடிந்தது. இது பற்றி இங்கிலாந்து பத்திரிகைகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்துள்ளன. அது பற்றிய விவரம்.

**ஸ்ரொரஸ் சூப்பர்-திசன்**

டெண்டுல்கர் சதத்தை தொடர்ந்து ஸ்ரொரஸ் விளையாடிய விதம் அருமை. அவர் குவித்த 158 ஓட்டங்களில் உலகக் கிண்ணத் தொடரில் மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையை இங்கிலாந்து பெற்றது. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. தலா 1 புள்ளி பெற இரு அணிகளும் தகுதியானவை.

**38000 ரசிகர்கள் தானா?- தி கார்டியன்**

பெங்களூர் சின்னசாமி அரங்கில் 38 ஆயிரம் ரசிகர்கள் என்று தான் சொல்கிறார்கள். ஆனால் ஸ்ரொரஸ் ஆட்டமிழந்த போது அரங்கம் அதிர்ந்ததை பார்த்த போது யாரும் அப்படி சொல்ல மாட்டார்கள். இந்திய துணைக்கண்டத்தில் உள்ள 100 கோடி ரசிகர்களும் இந்தியாவுக்கு ஆதரவாக குரல் கொடுத்தது போன்று இருந்தது.


**சந்தேகம் தீர்ந்தது-தி டெலிகிராப்**

இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்திற்கு முன் வரை ஸ்ரொரஸ் சிறந்த ஒருநாள் வீரர் தானா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. தற்போது யாரும் அதைப்பற்றி வாய் திறக்க மாட்டார்கள். டெண்டுல்கரை விட அந்த ஆட்டத்தில் ஸ்ரொரஸ் ஆதிக்கம் செலுத்தினார்.

**சூப்பர் தான் ஆனால் பயன் என்ன? - பிபிசி**

இது போன்ற ஒரு ஆட்டம்தான் உலகக் கிண்ணத் தொடருக்கு தேவை. ஆனால் இந்த போட்டியால் என்ன பயன். ஒரு ஆட்டம் முடிந்தால் அதில் ஒரு அணி வெற்றி பெற வேண்டும் அல்லது தோல்வி அடைய வேண்டும். ஆனால் புள்ளி இரு அணிகளுக்கும் பகிர்ந்து கொடுத்தால் என்ன பயன்?

## வியூகங்களை மாற்றுமா இந்திய அணி?



உலகக் கிண்ண லீக் ஆட்டங்களில் இந்திய அணி முதல் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது. இங்கிலாந்துடனான 2ஆவது ஆட்டம் சமனிலையில் முடிந்தது. இந்த இரு ஆட்டங்களிலும் இந்திய அணியின் பந்து வீச்சு படுமோசமாக இருந்தது. சகீர்கான் மட்டும் ஓரளவு மிரட்டும் வகையில் செயல்படுகிறார்.

முனாப்பட்டேல், ஹர்பஜன்சிங், சாவ்லா ஆகியோரது பந்துவீச்சு எந்த ஒரு ஒரு கட்டத்திலும் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அமையவில்லை. மிகுதி நேரம் சுழற்பந்து வீச்சாளரான யுவராஜ்சிங், யூசுப்பதான் ஆகியோரும் சொதப்பி வருகின்றனர். இதனால் இந்திய அணி கூடுதலாக ஒரு வேகப்பந்து வீச்சாளருடன் களமிறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்பெஷலிஸ்ட் வீரர் என அழைக்கப்படும் யூசுப்பதான் இரு ஆட்டங்களிலுமே துடுப்பாட்டத்தில் அவ்வளவாக சாதிக்கவில்லை. பந்து வீச்சிலும் அதேநிலைதான். அவர் கடந்த ஆட்டத்தில் வெறும் 3 ஓவர் மட்டுமே வீசினார்.

இதனால் யூசுப் பதான் துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நெருக் கடியில் உள்ளார்.

தோனியின் வியூகங்கள் இரு ஆட்டங்களிலும் அவ்வளவாக பலிக்கவில்லை.

வித்தியாசமான அணுகு முறைகளை கையாண்டு வெற்றிகளை தேடி கொடுக்கும் அவருக்கு இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டம் சோதனையாகவே அமைந்தது.

களத்தடுப்பு செய்வதில் அவர் சற்று குழப்பம் அடைந்துள்ளார். முக்கியமான கட்டத்தில் பந்துவீச்சாளரை தேர்வு செய்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

உல கக் கிண்ண தொடருக்கு முன்பாக பல்வேறு தொடர்களில் இந்திய அணி பவர்பிளேயில் அதிக விக்கெட்டுக் களை பறிகொடுத்து வந்தது.

இதனா லேயே என்னவோ தற்போது உல கக் கிண்ண தொடரில் இந்திய வீரர்கள் பவர்பிளேயில் அதிர டி காட்டா மல் நிதானமாக ஆடுகின்றனர்.

இங்கிலாந்து ஆட்டத்தில் ஒரு பவர்பிளேயில் வெறும் 32 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தது.

இதை தவிர்த்து இந்த ஓவர்களில் மிரட்டினால் இன்னும் அதிக ஓட்டங்களை குவிக்கலாம்.

சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான பெங்களூர் ஆடுகளத்தில் சாவ்லா சொதப்பிவிட்டார். இனிவரும் ஆட்டங்களில் அவருக்கு பதிலாக அஸ்வினுக்கு வாய்ப்பு கொடுக்கலாம்.

## வோர்ன் ஒரு தீர்க்கதரிசி



அவுஸ்திரேலியா முன்னாள் ஜாம்பவான் ஷேன் வோர்ன் தலை சிறந்த சுழல்பந்து வீச்சாளர் மட்டு மல்ல கிரிக்கெட் போட்டிகளின் முடிவைத் துல்லியமாகக் கணிக்கக் கூடிய தீர்க்கதரிசி என்றும் நிருபித்துள்ளார்.

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாகவோ அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

போட்டியை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். சமபலம் வாய்ந்த அணிகள் மோதும் இந்தப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இருக்கும்.

இந்தப் போட்டி சமனிலையில் முடிவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்று டுவிட்டர் இணையத் தளத்தில் வோர்ன் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரொரஸ் கூறுகையில், வோர்ன் ஒரு ஜீனியஸ். இவ்வளவு துல்லியமாக ஆட்டத்தின் முடிவை யாராலும் கணிக்க முடியாது என்றார்.

## ஐ.சி.சி. வீரர்கள் தரவரிசையில் அம்லா, விக்டோரி முதலிடத்தில்

ஐ.சி.சி. சிறந்த அணிகள் மற்றும் வீரர்கள் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

கிரிக்கெட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப்பட்டியலை ஐ.சி.சி. நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் இந்திய வீரர் வீரேந்திர சேவாக் பங்களாதேஷ் அணிக்கு எதிராக 175 ஓட்டங்கள் குவித்ததன் மூலம் 6 இடங்கள் முன்னேறி பட்டியலில் 5 ஆவது இடத்தைப் பிடித்தார்.

அத்துடன் இங்கிலாந்து அணிக்கு எதிராக சதமடித்து அசத்திய சச்சின் டெண்டுல்கர் 5 இடங்கள் முன்னேறி 10 ஆவது இடத்தைப் பெற்றார்.

இந்திய அணிக்கு எதிராக சதமடித்த இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொரஸ், எட்டு இடங்கள் முன்னேறி 13 ஆவது இடம்பிடித்தார்.

இவர்களைத் தவிர, பங்களாதேஷ் வீரர் தமிம் இக்பால் 23ஆவது இடம், பாகிஸ்தான் வீரர்களான மிஸ்பா உல் ஹக் 32 ஆவது இடம், யுனிஸ்கான் 44 ஆவது இடம், இங்கிலாந்தின் கெபின் பீற்றர்சன் 52 ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

ஐ.சி.சி. சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்த முதல் 10 துடுப்பாட்ட வீரர்கள்,

ஹசிம் அம்லா (தென்னாபிரிக்கா).ஏ.பி.டிவில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), விராட் ஹோலி (இந்தியா), மைக்கெல் ஹசி (ஆஸி.), மகேந்திர சிங் தோனி (இந்தியா), திலகரட்ண டில்சான் (இலங்கை), வீரேந்திர சேவாக் (இந்தியா), குமார் சங்கக்கார (இலங்கை), ஷேன் வோட்ஷன் (ஆஸி.), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா).

ஐ.சி.சி. பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதல் பத்து வீரர்களில், டானியல் விக்டோரி (நியூசிலாந்து), மோர்னி மோர்கல் (தென்னாபிரிக்கா), பிரைஸ் (சிம்பாவே), டயல் ஸ்ரையன் (தென்னாபிரிக்கா), மிச்சல் ஜோன்சன் (ஆஸி.), சகிப் அல் ஹசன் (பங்களாதேஷ்), சுவான் (இங்கிலாந்து), அப்துர் ரஷாக் (பங்களாதேஷ்), நுவான் குலசேகர (இலங்கை), ரிசொற் சோபே (தென்னாபிரிக்கா) ஆகியோர் உள்ளனர்.

ஐ.சி.சி. சர்வதேச ஒருநாள் போட்டியில் சிறந்த அணிகள் தரவரிசையில்,

அவுஸ்திரேலியா (131), இந்தியா (119), தென்னாபிரிக்கா (118), இலங்கை (117), இங்கிலாந்து (109), பாகிஸ்தான் (103), நியூசிலாந்து (91), பங்களாதேஷ் (67), மேற்கிந்தியத் தீவுகள் (66), சிம்பாவே (37), அயர்லாந்து (37), நெதர்லாந்து (15), கென்யா (0) ஆகியன உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 – ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

# மலிங்க ஹட்ரிக்: கென்யா சரிந்தது இலங்கை அணி அபார வெற்றி



(கொழும்பு)

கென்யா அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் லசித் மலிங்க ஹட்ரிக் விக்கெட் சாதனையுடன் இலங்கை அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

10ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற 14ஆவது லீக் போட்டியில் ஏ பிரிவைச் சேர்ந்த இலங்கை- கென்யா அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கென்யா அணித் தலைவர் கமாண்டே முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கென்யா அணிக்கு ஒயுமா, வோட்டர்ஸ் ஜோடி ஆரம்பம் வழங்கினர்.

இதில் ஒயுமா ஒரு ஓட்டத்துடன் குலசேகர வின் பந்து வீச்சிலும் வோட்டர்ஸ்03 ஓட்டங்களுடன்மலிங்க வின் பந்துவீச்சிலும் ஆட்ட மிழக்க கென்யா அணி 2.1 ஓவர்களில் 08 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்து தவித்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த கொலின், டேவிட் ஒபுயா சகோத ரர்கள் நிதானமாக ஆடி நம்பிக்கையளித்தனர்.

இந்த ஜோடி ஓட்டங்களை பெறுவதை விட விக்கெட்டுக்களைக்காப்பாற்றவே தற்காப்பு ஆட்டத்தில் ஈடுபட்டது.

இதில் கொலின் ஒபுயா 95 பந்துகளில் அரைச்சதம் பெற கென்யா அணி 30.3 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

177 பந்துகளை எதிர்கொண்டு 94 ஓட்டங்களை பகிர்ந்தபோது கொலின் ஒபுயா 100 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 52 ஓட்டங்களை எடுத்து மலிங்கவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரிகோலோ 07 ஓட்டங்களுடன் மத்யூஸின் பந்துவீச்சில் வெளியேறினார்.

மிஸ்ரா களமிறங்க மறுமுனையில் டேவிட் ஒபுயா 104 பந்துகளில் அரைச்சதம் பெற்றார்.

எனினும் டேவிட் ஒபுயா 106 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 51 ஓட்டங்களை யெடுத்து முரளிதரன் பந்தில் ஆட்டமிழக்க கென்யா அணி 40.1 ஓவர்களில் 127 ஓட்டங்களை யெடுத்து 5ஆவது விக்கெட்டை யிழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் கமாண்டே ஒரு ஓட்டத்துடன் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

### வந்தார் மலிங்க

அடுத்து ஒடியாம்போ களமிறங்க மறு முனையில் மிஷ்ராவை பூச்சியத்துடன் 42 ஆவது ஓவரின் கடைசிப் ப்ந்தில் மலிங்க வெளியேற்றினார்.

தொடர்ந்து 43 ஆவது ஓவரில் முதலாவது பந்தில் ஒன்கொண்டாவையும் இரண்டாவது பந்தில் நிகோஷியையும் ஆட்டமிழப்பு செய்த மலிங்க, ஹட்ரிக் விக்கெட் சாதனையைப் படைத்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஒட்டியானோவின் விக்கெட்டையும் மலிங்கபதம்பார்க்க கென்யா அணி 43.4 ஓவர்களில் 142 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் ஓடியம்போ 8 ஓட்டங்களை ஆட்ட மிழக்காமல் எடுத்தார்.

பந்து வீச்சில் லசித் மலிங்க 7.4 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் குலசேகர, மத்யூஸ், முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 143 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு தரங்க-டில்சான் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 8.2 ஓவர்களில் 72 ஓட்டங்களை குவித்த போது திலகரட்ண டில்சான் 30 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 44 ஓட்டங்களை எடுத்து ஒட்டியானாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த சங்கக்கார சிறப்பாக ஆட மறுமுனையில் உபுல்தரங்க 54 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

இந் நிலையில் இலங்கை அணி 18.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 146 ஓட்டங்களைக் குவித்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் (188 பந்துகள் மீதமாக உள்ள நிலையில்) வெற்றி பெற்றது.

இதன் மூலம் தொடரில் 2 ஆவது வெற்றியை பெற்ற இலங்கை அணி புள்ளிகள் கணக்கை 4ஆக உயர்த்தியது.

இதில் உபுல்தரங்க 59 பந்துகளில் (12 பவுண்டரிகள் அடங்கலாக) 67 ஓட்டங்களையும் அணித்தலைவர் குமார் சங்கக்கார 27 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றி நாயகன் மலிங்க ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

### இரண்டாவது முறை

கென்யாவை வீழ்த்திய இலங்கை அணி உலகக்கிண்ண அரங்கில் இரண்டாவது முறையாக 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முன்னதாக இலங்கை அணி கடந்த 2003 கனடாவை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

உலகக்கிண்ண வரலாற்றில் அதிக பட்சமாக நியூசிலாந்து அணி மூன்று முறை 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. மேற்கிந்தியத்தீவுகள், இங்கிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட அணிகள் தலா 2, இந்தியா ஒரு முறையும் 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி கண்டன.

### முதல்வீரர்

உலகக்கிண்ண வரலாற்றில் இரண்டாவது முறையாக ஹட்ரிக் சாதனை படைத்து அசத்தினார் இலங்கையின் லசித் மலிங்க. நேற்று லீக் போட்டி யில் வேகத்தில் மிரட்டிய இவர் மொத்தம் 6 விக்கெட் கைப்பற்றினார்.

இப் போட்டியின் 42ஆவது ஓவரின் கடைசிப்பந்தில் டான்மே மிஸ்ராவை (0) எல்.பி.டபிள்யூ. முறையில் வெளியேற்றினார் மலிங்க. பின் 44 ஆவது ஓவரில் முதல் இரண்டு பந்தில் ஒன்கொண்டா (0), நேகாஷி (0) உள்ளிட்டோரை அடுத்தடுத்து கிளீன் போல்டாக்கினார்.

இதன் மூலம் உலகக்கிண்ண அரங்கில் இரண்டாவது முறையாக (2007,2011) ஹட்ரிக் சாதனை படைத்த முதல் வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார். முன்னதாக கடந்த 2007இல் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 4 பந்தில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

✸ இது இலங்கை சார்பில் உலகக்கிண்ண அரங்கில் பதிவு செய்யப்பட்ட மூன்றாவது ஹட்ரிக் என்ற பெருமை பெற்றது. முன்னதாக சமிந்தவாஸ் (எதிர் பங்களாதேஷ் 2003), மலிங்க (2007 எதிர் தென்னாபிரிக்கா) உள்ளிட்ட இலங்கை பந்துவீச்சாளர்கள் இச் சாதனை படைத்திருந்தனர்.




## புள்ளிப் பட்டியல்

ICC Cricket World Cup 2011

### பிரிவு A

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | +2.663 |
| பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +2.160 |
| அவுஸ்திரேலியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | +1.813 |
| நியூசிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.507 |
| சிம்பாவே | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +0.840 |
| கனடா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -3.850 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.825 |

### பிரிவு B

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 1 | 0 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 2 | 1 | 0 | 1 | 0 | 3 | +0.126 |
| மேற்கிந்தியத் தீவுகள் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | +1.879 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | +0.766 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | -0.600 |
| அயர்லாந்து | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -0.540 |
| நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -2.275 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக சட்டசபைத் தேர்தலை ஏப்ரல் 13 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

தமிழக சட்டசபை தேர்தல் எதிர் வரும் ஏப்ரல் 13ஆம் திகதி நடத்தப் படும் என டில்லியில் தலைமை தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது. இதற்கான முறையான அறிவிப்பு மார்ச் 19ஆம் திகதி வெளியிடப்படும். புதுச்சேரியிலும் இதே நாளில் தேர்தல் நடைபெறும்.

கேரளாவில் ஒரே கட்டமாக ஏப்ரல் 13ஆம் திகதியும் அசாமில் 2 கட்டமாக ஏப்ரல் 4மற்றும் 11ஆம் திகதிகளிலும் மேற்கு வங்கத்தில் 6கட்டமாகவும் தேர்தல் நடை பெறும். மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 18, ஏப்ரல் 23, ஏப்ரல் 27 மற்றும் மே 3, மே 7, மே 10 ஆகிய திகதிகளில் சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. தமிழகம், புதுச்சேரி, கேரளா, மேற்குவங்கம், அசாம் உள்ளிட்ட 5 மாநிலங்கள் சட்டசபை தேர்தலை சந்திக்கிறது.

தமிழக சட்டசபைக்கு ஏப்ரல் 13 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் மார்ச் 19ஆம் திகதி தொடங்குகிறது. வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் மார்ச் 26ஆம் திகதி. வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 28ஆம் திகதி நடைபெறுகிறது. வேட்பு மனுக்களை வாபஸ் பெற கடைசி நாள் மார்ச் 30ஆம் திகதியுடன் முடிகிறது.

தேர்தல் நடக்கும் அனைத்து மாநிலங்களிலும் பதிவாகும் வாக்குகள் மே 13ஆம் திகதி எண்ணப் படுகின்றன.

இத் தேர்தலுக்கான திகதி விபரம் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. தமிழகத்திற்கான சட்டசபை காலம் மே16ஆம்திகதியுடன் முடிவுக்கு வருகிறது. இங்கு தேர்தல் நடத்துவதற்கான வாக்காளர் பட்டியல், வாக்காளர் அடையாள அட்டை மற்றும் மின்னணு இயந்திரங்கள் உள்ளிட்ட அனைத்து முன் ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. தேர்தல் பணி தொடர்பாக தேர்தல் கமிஷன் பல முறை ஆய்வு கூட்டங்களை நடத்தி ஏற்பாடுகள் முடிந்து வாக்குப் பதிவுக்கு தயாராக இருப்பதாக தமிழக தேர்தல் ஆணையகம் அறிவித்தது. (ச-5)

## மாணவியைக் கடத்திய இருவர் பிடிபட்டனர்

பாடசாலை மாணவியை திருமணம் செய்யும் நோக்குடன் கடத்திய நபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். கொடிகாமம் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 10-ல் கல்விகற்றுவரும் மாணவி ஒருவரை திருமணம் செய்யும் நோக்குடன் கடத்திய நபரும் அவருக்கு உதவியவரும் கொடிகாமம் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியபோது நீதவான் மாணிக்கவாசகம் கணேசராசா இவ்விரு நபர்களையும் தலா ஒரு லட்சம் ரூபாய் ஆட்பிணையிலும் 5 ஆயிரம் ரூபாய் பணப் பிணையிலும் செல்ல உத்தரவிட்டார். (எ-6,24)

# நடுவானில் விபத்து!...

விமானப் படையின் 60-வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களை முன்னிட்டுவிமான சாகச நடவடிக்கைகளை பிரமாண்டமான முறையில் நடத்துவதற்கென விமானப் படை கடும் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தது. இதற்காக விமான சாகச பயிற்சி ஒத்திகை ஒன்றின் போதே இவ்விபத்து இடம்பெற்றது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் விமானங்கள் நேருக்குநேர் மோதி வெடித்து வீழ்ந்ததை பலர்நேரில் கண்டுள்ளனர். விபத்துக்குள்ளான விமானத்தின் இரு விமானிகளும்தானியங்கி பரசூட் பொறி மூலமாக பாதுகாப்பாக வெளியேறி விட்டதாகமுதலில்வந்த செய்திகள் தெரிவித்த போதும் விமானிகளில் ஒருவர் உயிரிழந்ததுடன் இரண்டு விமானங்களும் முற்றாக சிதறிப்போயுள்ளன.

கொல்லப்பட்ட விமானி பிளைட் லெப்டினன்ட் எம்.பெரேரா என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தன்னியக்க பாதுகாப்புச் செயற்பாட்டை இயக்கிவிமானத்திலிருந்து வெளியேறிய போதிலும் அவருக்கு ஏற்பட்ட காயங்களாலேயே அவர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்தில் கடும் காயங்களுக்கு உள்ளான மற்றைய விமானி, ஸ்கோட்ரன் கப்டன் வஜிர ஜயக்கொடி உயிர்தப்பி மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். பொது மக்களில் சிலரும் இவ்விபத்தில் காயமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடுவானில் விபத்துக்குள்ளான விமானங்கள் தொழிற்சாலை ஒன்றின்மீது விழுந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. இதனால் குறிப்பிட்ட தொழிற்சாலையிலும் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. இச் சம்பவத்தின் போது பொதுமக்கள் பலர் காயமடைந்துள்ளனர். தீ அணைக்கும் படையினர் அழைக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டது.

விபத்துக்குள்ளான இரண்டு விமானங்களும் வன்னி யுத்தத்தில் முக்கிய பங்கு வகித்த கிபிர் ரக போர் விமானங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்பஹா பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச் சம்பவம் தொடர்பாக விமானப்படை உயர் அதிகாரிகள் கொண்ட குழுவொன்று உடனடி விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு உடனடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார். குறிப்பிட்ட பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத் தப்பட்டுள்ளன. (ச-5)

# போர்க்குற்ற விசாரணைக...

தென்னாசியப் பிராந்தியத்துடனான நெருக்கத்தை வலுப்படுத்தக் கொள்வதற்கான முக்கிய விவகாரங்களாக நல்லிணக்கம், பொறுப்புக் கூறுதல் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பிலான சாதகமான சமிஞ்ஞைகளை அமெரிக்கா எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை லிபியாவுடன் இலங்கையை தான் ஒப்பிடவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் படைத்தரப்பால் சுமார் 7ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபை கணிப்பீடுகள் தெரிவித்திருந்தது. ஆனால் இப் போரில் சுமார் 40 ஆயிரம் பேர்வரை கொல்லப் பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் தூதுவர் கோர்டன் வைஸ் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இப் போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப் பட்ட போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயதீனமான சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்என சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பிரித்தானியா உட்பட மேற்கத்தைய நாடுகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

இப் போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி, சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச நெருக்கடிகளுக்கான குழு ஆகியன ஆதாரங்களை வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் சர்வதேச போர்க் குற்ற விசாரணைகளை நிராகரித்த அரசாங்கம், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவை கடந்த வருடம் மே மாதம் 15ஆம் திகதி நியமித்திருந்தது.

இந்த ஆணைக்குழுவின் நியமனமானது வெறும் கண்துடைப்பு நாடகம் என சர்வதேச மனித உரிமை அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில், இலங்கை அரசாங்கம் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தின் முன்பாக நிறுத்தப் படக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளமை முக்கியத்துவம் பெறுகிறது. (ச-5)

## இறுதி யுத்த...

கொல்லப்பட்ட மொணாஷ் பெரேராவின் சடலத்தின் தலை மட்டும் தென்னை மரமொன்றின் அடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. உடலின் ஏனைய பாகங்கள் தீயில் கருகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அவரது பரசூட் விரியாத நிலையில் அருகிலிருந்த அன்னாசித் தோட்டம் ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. (எ-1)


கலைமகள் அழகுநிலா
≋ Beauty Academy ≋
புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்
முதற் பிரிவு – 05. 03. 2011
இரண்டாம் பிரிவு – 07. 03. 2011



பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சியின் மூலம் ஒரு அழகு நிலையம் நடாத்தும் தகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும்செயன் முறையாகும். பயிற்சி பெற ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்
- Facial (10 வகை)
- Threading
- Pimple Treatment
- Waxing
- Hair Stratening
- Hair Perming
- Hair Cutting
- Hair Colouring
- Hair dye
- Face Cleaning
- Pedeicure Manicure
- Bleaching
- கறுப்புக் காய்கள் இயந்திர மூலம் அகற்றப்படும்
- Bridal make up (6 வகை)
- Wedding Icing

தொடர்புகள்: 0773719071

பயிற்சி நேரம் : காலை 10 மணி - மதியம் 1.30 மணி வரை
அனுமதிக் கட்டணம்: 6000/=
கலைமகள் அழகுநிலா
390, பிரதான வீதி,பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-2568)



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழாவின்போது வாணிபம் மேற்கொள்ளும்
வணிகர்களுக்கான அறிவித்தல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏல விற்பனை 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை
(சி-2575)





Api Beauty Parlour and Training Academy
O/L பெறு பேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவிகள் மற்றும் ஆர்வமுள்ள நங்கையர்களுக்கானதுரித காலப் பயிற்சிகள்.
* Bridal make up-புதுவிதமான மணப்பெண் அலங்காரம்
* Cake Icing-கேக் ஐசிங் பலவகையான ஐசிங் பூக்களுடன்
* Facials-முக அலங்காரம்
Hair Cutting
Nail Arts
Hair treatmetments
Pedicure



Manicure இன்னும் பலவகையான பயிற்சிகள்வழக்கப்படும்
Note:-பயிற்சி முடிவின் போது சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* பயிற்சி ஆரம்பம் :- 05.03.2011 நல்லூர் கோவில் வீதி.
உடன் தொடர்புகளுக்கு :-021 222 9586
இல. 06, சட்டநாதர் வீதி, நல்லூர்.
(3914)


## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

புளியங்கூடல் தெற்கு ஊர்காவற்துறையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று 01.03.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை கண்மணியின் அன்பு மகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லைற் வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற மோகன் மற்றும் மோகனவசந்தா, மோகனகுமார், ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாம்பிகை, இராமச்சந்திரன், வாகீஸ்வரி, புஸ்பலதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 02.03.2011 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்துறை.
0776162092, 0213002073

தகவல்:-
குடும்பத்தினர்
(சி-2574)


நிழல் அல்ல; நிஜம்!!
ஒரே வாரத்திலே!
- உங்கள்கருமைநிறம்நீங்கி அழகியநிறம்!
- முகப்பருக்கள்,முகச்சுருக்கம், கரும்புள்ளிகள், கழுத்து கருமை நீக்கம், உதடு கருமை நீக்கம் போன்றவற்றிற்கான சிகிச்சைகள்.
- இளநரை, முடி உதிர்தல், பொடுகு போன்றவற்றிற்கான சிகிச்சைகள்.
- உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல், வயிறு மற்றும் இடுப்புத் தசைகள், கைத்தசைகள் குறைவதற்கான சிகிச்சைகள்.
- அழகுச் சிகிச்சைகள்.
- மூலிகைகளிலான பேசியல்கள்.

"முற்றிலும் மூலிகைச் சிகிச்சைகள் பக்கவிளைவுகள் அற்றவை"
தொடர்பு: 0777351954, 0774011129
SANEYA BEAUTY PALACE
132,KACHCHERI NALLUR ROAD, JAFFNA.
"WE CARE ALWAYS"
(3916)



மீண்டும் சாதனை படைக்க
வெற்றித் தேர்வு
ஜனவரி முதல் யூலை வரை 20 தேர்வுகள்
2011- தரம் : 5ற்கு
ஜனவரி முதல் நவம்பர் வரை 15 தேர்வுகள்
2011- தரம் : 4ற்கு
விடை, இலவச கையேட்டுடன் பலவர்ண நிறங்களில்
கல்விச்சாலைகளுக்கு விசேடகழிவு, ஆசிரியர்பிரதி இலவசம்
விற்பனையில் - தரம்:5 - 1,2,3 தரம்:4 - 1
இப்போது புத்தகசாலைகளில் பெறலாம்
யாழ்நகர் / கொழும்பு பூபாலசிங்கம் | சுன்னாகம் துர்க்கா | நெல்லியடி மொடேன் | கிளிநொச்சி அறிவுமதி | வவுனியா KBK
விரிவான விபரங்களுக்கு: 0775388471, 212229016, 0773126807


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org